Registered as a NewsPaper

விலை ரூபா–8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்–12

நாதம் –16 திருவள்ளுவர் ஆண்டு– 2036 பங்குனி–01 14–03–2005 திங்கட்கிழமை ஓசை 24



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-11459) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## படையினர் கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தீவகத்திற்கிடையான பிரதான வீதியிலுள்ள அல்லைப்பிட்டிச்சோதனைச்சாவடியில் சிறிலங்காக் கடற்படையினர் மீண்டும் தமது சோதனைக்கெடுபிடிகளை அதிகரித்துள்ளனர்.

நீண்டகாலமாக இச்சோதனைச் சாவடியில் கைவிடப்பட்டிருந்த பொது மக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகள் மீண்டும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக இவ்வீதியால் வாகனங்களில் செல்வோர் மேற்படி (12ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி அரசு போராட்டங்களை நகுக்கி வருகிறது

– ஐக்கிய தேசியக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் அவசரகாலச்சட்டத்தைப் பயன்படுத்தி, சுனாமி கடற்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்கள் தொடர்பாக எழும் ஆர்ப்பாட்டங்களையும் தனியார் மயமாக்கலுக்கு எதிராகப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொள்ளும் எதிர்ப்பலைகளையும் கட்டுப்படுத்தி வருவதாக ஐ.தே.க குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போதே ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனாரட்ண இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்: எமது அரசாங்கம் (12ஆம் பக்கம் பார்க்க)

## பதிவுசெய்யக் கோரிக்கை

சிறிலங்காவில் எட்டுப் புதுக் கட்சிகள் தேர்தல் திணைக்களத்திடம் பதிவு செய்யக் கோரி மனுத்தாக்கல் செய்துள்ளன.

இப்பொழுது 52 பதிவு செய்யப்பட்ட கட்சிகள் இருக்கின்ற வேளையிலேயே இக்கட்சிகள் பதிவு செய்யக் கோரி விண்ணப்பம் செய்துள்ளன.

எனினும், வடக்குகிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் விதிகளின்படி எந்தவொரு புதிய கட்சியையும் பதிவு செய்ய முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆழிப்பேரலை நிவாரண விநியோகம் அரசு இணைக்கத்திற்கு வரவிருப்பம்

## நோர்வே வெளியுறவு அமைச்சர் பீற்றர்சன்

**சுனாமி நிவாரணம் விநியோகிப்பதில் இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவதற்கான விருப்பத்தை சிறிலங்கா அரசும், விடுதலைப் புலிகளிகளும் தெரிவித்துள்ளதாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.**

இந்தப் புதிய நிலைப்பாடு சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாதகமான சூழலை உருவாக்கும் என்று நோர்வே வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு செய்தி ஸ்தாபனமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் புதிய ஈடுபாடு இருதரப்பினருக்கும் மத்தியிலும் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக அமையும் என்று அவர் (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசால் நஷ்ட ஈடு வழங்கப்படும் வரை வர்த்தகரீதியான மீன்பிடி இல்லை

வடமராட்சி வடக்கு மீனவர்கள் சங்கம் தெரிவிப்பு

(வடமராட்சி)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தொழில் உபகராணங்களை இழந்துள்ள வடமராட்சி வடக்கு மீனவர்கள் மீண்டும் தொழிலில் ஈடுபட ஏதுவாக அவர்களுக்கான நஷ்டஈடு அரசால் வழங்கப்படும் வரை வர்த்தக நோக்கிலான மின்பிடியில் ஈடுபடப் போவதில்லையென அப்பகுதி மீனவ சங்கங்கள் அறிவித்துள்ளன. சுனாமியினால் வடமராட்சி வடக்கின் தொண்டமனாறு முதல் பருத்தித்துறையின் முனைப்பகுதி வரையான கரையோரப்பகுதிகளில் தரிக்கவிடப்பட் (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.ஆரையம்பதி பிரதேச செயலர் வளாகத்தில் சுனாமி நிவாரணப் பொருட்கள் புதை குழியிலிருந்து மீட்பு

ஆத்திரமடைந்த மக்கள் போராட்டம்

மட்டக்களப்பு ஆரையம்பதிப் பிரதேச செயலக வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த சுனாமி நிவாரணப் பொருட்களைப் பொதுமக்கள் நேற்றுக் கண்டெடுத்துள்ளனர்.

சுமார் 10 அடி ஆழமான குழியிலிருந்து சீனி, பருப்பு, அரிசி, மா, பால்மா, கருவாடு, பனடோல் உட்பட அதிகளவான உணவுப் பொருட்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து மட்டக்களப்பு மண்முனைப்பற்று (ஆரையம்பதி) பிரதேச செயலகம் முன்பாக நியாயம் கேட்டுப் போராடிய அப்பிரதேச மக்கள் பொலிசாரினால் கண்ணீர்ப் புகையடித்து கலைக்கப்பட்டனர்.

இந்தப் பொருட்கள் பாவனைக்கு உதவாத பொருட்கள் என்பதால் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் முன்னிலையில் அழிக்கப்பட்டதாக பிரதேச செயலாளர் கே.சிவநாதன் தெரிவித்தார். அப்பிரதேச பொதுச் மட்டு...(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கற்கடந்த குளத்தில் துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயம்

(கொழும்பு)

மன்னார் முருங்கனில் கற்கடந்த குளம் இடம்பெயர்ந்தோர் முகாமில் நேற்று முன்தினம் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் வசித்து வந்த மரக்கறி வியாபாரியான பாலசிங்கம் சனார்த்தன் (வயது 20) என்ற இளைஞரை விசாரணை செய்வதற்கெனக் கூறியே அவர் மீது துப்பாக்கி சூடு நடத்தியதாக முருங்கன் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக்கூறப்படும் மற்றைய இளைஞர் தப்பியோட முற்பட்டபோது அங்குள்ள மக்களால் பிடிக்கப்பட்டுப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இவரிடம் இருந்த கைத்துப்பாக்கியும் பொலி (12ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் அராஜகத்தைக் கண்டித்து யாழ். கண்காணிப்பு அலுவலகம் முன் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலியில் வயோதிபப் பெண் ஒருவரைப் படைச்சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்த சம்பவம் மற்றும் யாழ். வடமராட்சி துன்னாலைப் பகுதியில் வீட்டில் உறக்கத்திலிருந்த பெண்கள் மீது இராணுவச் சிப்பாய் ஒருவர் பாலியல் வல்லுறவு புரிய முயற்சித்த சம்பவம் மற்றும் படையினரது அராஜகச் செயல்களை அடுத்து மக்களால் மேற்கொள்ளப்படும் இராணுவ எதிர்ப்புப் போராட்டங்களை அடக்கும் நோக்குடன் படையினர் பொதுமக்கள் மீது புரியும் மிலேச்சத்தனமான தாக்குதல் போன்ற படையினரது காடைத்தனத்தைக் கண்டித்து இன்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட தலைமையகம் முன்பாக மாபெரும் மக்கள் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டமாவடி கொலையுடன் தொடர்புடையோரை முஸ்லிம் மக்கள் விரைவில் இனங்காண்பர்

–மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன்

பொலநறுவை மாவட்டம் செவனப்பிட்டியவில் ஆறு கிராமவாசிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் சூத்திரதாரிகளை அக்கிராம மக்கள் அடையாளம் கண்டிருப்பது போல் ஓட்டமாவடி முஸ்லிம் இளைஞர் படுகொலையுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளையும் முஸ்லிம் மக்கள் அடையாளம் காண்பார்கள் என விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலையிலுள்ள விடுதலைப்புலிகளின் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

பிரமந்தனாறு விசுவமடுவைச் சேர்ந்த வல்லிபுரம் குகதீசன் என்பவருடைய அடையாள அட்டை (830025170 V) 11.03.2005 ஆம் திகதி அம்பலப்பெருமாள் பாடசாலைக்கும், முகமாலை சோதனைச் சாவடிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி காவல்பணிமனையில் அல்லது விசுவமடு காவல்பணிமனையில் ஒப்படைக்கும்படி வேண்டுகிறேன். (5796)

### தவறிவிட்டது

முல்லைத்தீவு அளம்பிலைச் சேர்ந்த தெ.ரவிக்குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், சிறுதொகைப் பணமும் அடங்கிய ஆண்களுக்குரிய பேஸ் 12.03.2005 மாலை 5.30 மணிக்கும் 7.30 மணிக்குமிடையில் சிலாவத்தைச் சந்திக்கும் தியோகு நகர்ச்சந்திக்கு மிடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவாகள் சிலாவத்தைச் சந்தியில் உள்ள அன்னம் பல்பொருள் வாணிபக் கடையில் ஒப்படைக்கவும். (சி.11560)

### விற்பனையாகின்றது

அன்ரன் பதிப்பு G.C.E O/L கடந்தகால வினாவிடை (1993-2004) புத்தகங்கள் பெற்றுக் கொள்ளவும், போட்டோ பிரதி செய்து பெற்றுக் கொள்ளவும் குயிலன் புத்தக சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சி. (சி.11544)

### தவறிவிட்டது

ஞானமுத்து அன்ரன்சாள்ஸ் 127,பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். என்பவரின் கல்விச்சான்றிதழ்கள் அடங்கிய நீலநிற பிளாஸ்ரிக் கவர் (FILE) யாழ்ப்பாணத்துக்கும்-கரடிப்போக்குச் சந்திக்குமிடையில் 11.03.2005 காலை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனைகளில் அல்லது T.P-077 3053165 உடன் தொடர்பு கொள்ளவும். தகவல்: ஞா.அன்ரன் சாள்ஸ். (5371)

## திலீபன் மருத்துவ சேவையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா

(பூநகரி)

தியாக தீபம் திலீபன் மருத்துவசேவையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா பூநகரியில் நேற்று சிறப்புற இடம்பெற்றது.

மாலை 3.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச் சுடரினை மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் அருந்தா மற்றும் கிளி. மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூவிழி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை திலீபன் மருத்துவசேவை நிர்வாகப் பொறுப்பாளர் புலிமறவன் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரேற்றல், மலர் மாலை அணிவித்தல், மலரஞ்சலி நிகழ்வுடன் சிறப்புரைகளும் நடைபெற்றன.

இங்கு சிறப்புரைகளை பூநகரி அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைக்குமரன், கிளி. மாவட்ட அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் ஈகைவேந்தன், நல்லூர் மகாவித்தியாலய அதிபர் கணேஸ்வரநாதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

பணியாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

(34)

## சாவு அறிவித்தல்

### கணேசன் ஞா[illegible]லெட்சுமி

உருத்தி[illegible] சவநகர் இல[illegible] ஐ நிரந்தர வசிப்பிடமாகக் கொ[illegible]ட கணேசன் ஞானலெட்சுமி அவர்கள் 13.03.2005 காலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணேசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா, சின்னம்மா தம்பதிகளின் மகளும், யோகலிங்கம் (இந்தியா), கமலகுமாரி, காந்தரூபா, கோமதி, சோதிமதி (லண்டன்), லோகேஸ்வரன் (ஜேர்மனி), தவனேசன் (பிரான்ஸ்), யசோதா(இந்தியா), லகுலேசன், கயோதா ஆகியோரின் அன்புத் தாயாரும், வியஜலட்சுமி (இந்தியா), இன்பராசா, சற்குணராசா, மகாலிங்கம், சிவனேசன் (லண்டன்), தர்சினி (ஜேர்மனி), தாரணி (வவுனியா), கென்றி மரியதாஸ் (லண்டன்), தயானி ஆகியோரின் அன்பு மாமியாரும், தேவராசா, குகேந்திரராசா (பிரான்ஸ்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பவதி, வசந்தா (பிரான்ஸ்), தங்கேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

(5497)

## தாடி மாஸ்ரர்




சோதிடர், தாடி மாஸ்ரர்
இல 53, அண்ணாவீதி,
ஆனந்தபுரம், கிளிநொச்சி.
மத்திய கல்லூரிக்கு எதிராக

வெளிநாட்டு ஜாதகம் எழுதவும்,சோதிடம் சம்பந்தமான சகல விடயங்களையும் அறிந்து கொள்ளலாம். (வீடு,கிணறு)

(5789)

## 31 ஆம் நாள் நினைவும், அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்



தோற்றம்:-16-06-1920 மறைவு:-13-02-2005

அமரர்

### சபாபதி வேலாயுதபிள்ளை

2ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.
103 உதய நகர் மேற்கு, கிளிநொச்சி.

13.02.2005 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திய [illegible]து அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி அறிந்து உடன் வந்து எமக்கு ஆறுதல் அளித்தோர்க்கும் தொலைபேசி மூலமும், தொலை நகல் மூலமும் அனுதாபம் தெரிவித்தோர்க்கும், மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், 15.03.2005 செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிராத்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

க.தெய்வேந்திரன்-மருமகன். வே.சிவகடாட்சம்-மகன்
தெ. யோகேஸ்வரி- மகள் சி.யோகாம்பிகை-மருமகள்

பேரமக்கள்:

தெ.யோகேந்திரன்-சசிரோகா, தெ.கோகிலேந்திரன்-றெஜினா (பிரான்ஸ்)
தெ.சுரேந்திரன்- குமுதினி(மட்டக்களப்பு)
தெ.பாலேந்திரன்- சிவித்திரா (ஜேர்மனி)
க.பத்மஜோதி கமலநாதன் (நோர்வே)

தெ.தியாகேந்திரன் (போராளி கண்ணன் நேரு)
தெ.குகேந்திரன் (தமிழீழ வைப்பகம்)
தெ.யுகேந்திரன் (தொழில்நுட்பக் கல்லூரி)
தெ.துஸ்யேந்திரன் (போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவு)
தெ.அஜந்தாயினி (மாணவி)
தெ.டர்சிகா (மாணவி, கிளிநொச்சி மத்தியகல்லூரி)
சி.சகிலன் (பிரான்ஸ்)

பூட்டப்பிள்ளைகள்

கோ.அபிரா, கோ. இந்துரன் (பிரான்ஸ்)
சு.தனுசாத் (மட்டக்களப்பு)

தகவல்:-
குடும்பத்தினர்

(5788)

உ
சிவமயம்

## யோகபுரம் சிவாலயம்



### கொடியேற்றத் திருவிழா

எமது சிவாலயக் கொடியேற்றத் திருவிழா எதிர்வரும் 16.03.2005 ஆம் திகதி காலை ஆரம்ப மாகி, தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா நடை பெறும். அத்துடன் தேர்த்திருவிழா 24.03.2005 ஆம் திகதியும், தீர்த்தத்திருவிழா 25.03.2005 ஆம் திகதியும் நடை பெறும் என்பதனை அடியார்களுக்குத் அறியத் தருகின்றோம்.

பரிபாலனசபை (சி.11391)



# எமது கல்வியை மீள ஆரம்பிக்க போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்

## —யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

எமது கல்வியை மீள ஆரம்பித்து இடையூறின்றி செயற்பட வேண்டும் என்ற நோக்கில் நாம் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என யாழ்.பல்கலைக்கழக மருத்துவப் பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அது வெளியிட்டுள்ள அறிக்கையில்; யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடமானது கடந்த 26 வருட காலமாக நாட்டிற்குப் பெருமை சேர்த்த,சேர்த்துக்கொண்டிருக்கும் பல திறமைமிக்க வைத்தியர்களை உருவாக்கி வெற்றிகரமாக இயங்கி வருகிறது. இக்காலப் பகுதியில் இனப்பிரச்சினையும் யுத்தமும் மோசமாக நடைபெற்ற போதிலும் எமது பீடம் தனது கற்பித்தல் நடவடிக்கைகளில் உயர்தரத்தைப் பேணியே வந்துள்ளது.

இனப்பிரச்சினையின் மோசமான விளைவுகளிலிருந்து எமது பீடமும் தப்பவில்லை. திறமைமிக்க சிரேஷ்ட விரிவுரையாளர்களின் புலம் பெயர்வு, மாணவர்களின் கற்றற் காலத்தைப் பத்து வருடங்கள் என நீட்டியதுடன் சகோதர பீடங்களின் சமகால மாணவர்களிடமிருந்து பின்தங்கவைத்தது.

கடந்த சில வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட தற்காலிக நெருக்கடியற்ற இயல்பு வாழ்க்கை நிலை மூலமும், எமது பீட மாணவர்கள் ஏனைய மருத்துவபீடத்தின் சமகால மாணவர்களோடு வெளியேறக் கூடிய வாய்ப்பைப் பெற்றனர். எனினும் கடந்த சில மாதகாலமாக இறுதியாண்டு சத்திர சிகிச்சை கற்பித்தல் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இறுதிவருட மாணவர்களின் கற்கைநெறி மீண்டும் கேள்விக் குறியாகியுள்ளது.

1992 ஆம் ஆண்டிலிருந்து 13 வருடகாலமாக யாழ். மருத்துவபீடத்தின் சத்திர சிகிச்சைத்துறைக்கு நிரந்தர விரிவுரையாளர் எவரும் நியமிக்கப்படாத நிலையில் மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர்.

இறுதிவருட மாணவர்களின் சத்திர சிகிச்சை கற்கை நடவடிக்கைகளிற்கான பொறுப்பை இதுவரை எவரும் பொறுப்பெடுத்து செயற்படுத்த முன்வராத நிலையில் அக்கற்கை நெறி இடைநிறுத்தப்பட்டது.

மூன்று மாதங்களிற்கு முன்பு சத்திர சிகிச்சை கற்கைநெறி நிறுத்தப்பட்டபோது, இறுதியாண்டு மாணவர்களாகிய நாம், சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டோம். இம்முயற்சிகளிற்கு பதிலீடாக யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்கள் எமது இறுதிவருட கற்கைநெறிகள் இடையூறின்றி தொடர்ந்து நடைபெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக எழுத்து மூலம் உறுதியளித்தார்.

மூன்று மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் இந்தப் பிரச்சினைக்குரிய ஆக்கபூர்வமான முடிவு எதுவும் எட்டப்படவில்லையென்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். எமது மருத்துவபீட நிர்வாகம், பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் பல்கலைக்கழக மானியக் குழு ஆகியவற்றினால் இப்பிரச்சினை கையாளப்பட்டு தீர்க்கப்படாது நீண்டு செல்வதையும், எமது சத்திர சிகிச்சை கற்கை நெறி மீண்டும் ஆரம்பிக்கப்பட முடியாது இருப்பதையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமது சகோதர பீடங்களின் சமகால மாணவர்களுடன் ஒரே காலத்தில் வைத்தியர்களாக வெளியேறவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் வெளிமாவட்ட வைத்தியசாலைகளிற்கும் சென்று மருத்துவக் கற்கை நெறிகளை மேற்கொண்டு வந்த எம்மால் ஏனைய மருத்துவ பீடங்களிலிருந்தும் சமகால மாணவர்கள் வைத்தியர்களாக வெளியேறிவிட்ட நிலையில் இன்னமும் எமது கல்விக்காலத்தில் ஏற்படும் காலதாமதத்தினை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இப்பிரச்சினைகள் இறுதிவருட மாணவர்களாகிய எம்மை மட்டுமல்லாது ஏனைய கனிஷ்ட மாணவர்களையும் பெரும் பாதிப்பிற்குள்ளாக்கும் என்பது தெளிவான உண்மையாகும்.

இறுதிவருட மாணவர்களாகிய நாம் கடந்த மூன்று மாதகாலமாக இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பதற்கு பெரும் முயற்சிகளை மேற்கொண்டோம். எனினும் சம்பந்தப்பட்ட தரப்பினரால் தீர்விற்கான எந்தவொரு ஆக்கபூர்வமான முடிவுகளும் இதுவரை எட்டப்படவில்லை.

தீர்வு காண்பதற்கு நாம் எடுத்து வந்த சுமுகமான நடவடிக்கைகள் தோல்வியுற்ற நிலையிலும், எமது கற்கைநெறி தொடர்ந்து மேற்கொள்ளப்பட முடியாத நிலையிலும், தவிர்க்க முடியாத சூழ்நிலையில், எமது கல்வியை மீள ஆரம்பித்து இடையூறின்றி செயற்பட வைக்க வேண்டும் என்ற நோக்கில் இப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். எனவே யாழ். மருத்துவ பீடமும். பல்கலைக்கழக நிர்வாகமும்,பல்கலைக்கழக மானியக் குழுவும் விரைந்து செயற்பட்டு இப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வினைக் கண்டு எமது கல்வி தொடர வழியமைப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (36)

### -யாழ்.பல்கலைக்கழக-

# மருத்துவ பீட மாணவர்கள்; இன்று எதிர்ப்புப் பேரணி!

(யாழ்ப்பாணம்)

**யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் இன்று எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.**

பல்கலைக்கழகத்தின் இறுதி வருட மருத்துவப்பீட மாணவர்களது விரிவுரைகளை ஆரம்பிக்கக் கோரியே இப்பேரணி நடத்தப்படவுள்ளது.

காலை 9.00 மணிக்கு மருத்துவ பீட நுழைவாயிலில் பேரணி ஆரம்பமாகி பலாலி வீதியூடாக பல்கலைக்கழக பிரதான் நுழைவாயிலைச் சென்றடையும். அங்குவைத்து மனித உரிமை ஆணைக்குழுவுக்கும், சிறிலங்கா சனாதிபதிக்குமான கோரிக்கை மகஜர்கள் கையளிக்கப்படும்.

மருத்துவப் பீடத்தைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் விரிவுரைகளை பகிஷ்கரித்து பேரணியில் கலந்து தமது ஒருமித்த எதிர்ப்பினை வெளிக்காட்ட உள்ளனர்.

இதேவேளை இப்பேரணியினால் ஏனைய பீடங்களுக்கான கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படமாட்டாது என மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார். (36)

# 10 வருடங்களின் பின்னர் எறிகணை மீட்டு அழிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மந்திகை தோட்ட வெளிப்பகுதியில் இருந்து வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்று நேற்று முன்தினம் மதியம் 12.00 மணியளவில் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டது. கடந்த 1995 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது மந்திகை தோட்டப்பகுதியில் வீழ்ந்து வெடிக்காத நிலையிலிருந்த ஆர்.பி.ஜி எறிகணையே மீட்கப்பட்டது.இந்த எறிகணை தொடர்பாக பொலிசாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து அப்பகுதிக்கு வந்த படையினர் அந்த எறிகணையை வெடிக்க வைத்து அழித்தனர். (கா)

# காரைநகர் பேருந்துச்சேவை சீராக்கப்படுமா?

(காரைநகர்)

யாழ்.காரைநகர் பிரதேசத்தில் இடம்பெறும் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பேருந்துச் சேவை சீரற்று இருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்பகுதி மக்கள் தமது போக்குவரத்துச் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இது குறித்து வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் காரைநகர் சபையில் முறையிட்டும் பலன்கிடைக்கவில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.(33)

# தீவகக் கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

(தீவகம்)

யாழ்.தீவக கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பெரிதும் நிலவி வருகின்றது.

51 இயங்கும் பாடசாலைகளைக் கொண்ட தீவக கல்வி வலயத்தில் தற்பொழுது 138 ஆசிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதனால் பாடசாலைகளில் உரிய முறையில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம் பெறுவதில்லை எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

இதனால் இப்பகுதி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. (33)

# உலக உணவுசெயற்திட்டத்தை சிறந்த முறையில் பயன்படுத்துக

## — யாழ். அரச அதிபர் கே. கணேஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உலக உணவுத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் யாவும் சிறந்த திட்டமிடலின் அடிப்படையில் பயன்படுத்தப்படல் வேண்டும் என்று யாழ். அரசஅதிபர் வலியுறுத்தியுள்ளார்.

அந்த அடிப்படையில் பிரதேச ரீதியாக உலக உணவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களை அப்பகுதி பிரதேச செயலர்கள் உரியமுறையில் மேற்பார்வை செய்வது அவசியமென அரச அதிபர் கே.கணேஸ் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

உலக உணவுத்திட்ட அமுலாக்கலின் மூலம் மக்கள் பூரணமடைய வேண்டும் என்பதற்காகவும், வீண் விரையங்கள் திட்ட அமுலாக்கல் குறைபாடுகள் என்பவற்றைதவிர்க்கும் நோக்குடனும் அரசஅதிபர் இதனை வலியுறுத்தியுள்ளார். (33)

# மந்திகை வைத்தியசாலையை தரமுயர்த்த நடவடிக்கை

(வடமராட்சி)

யாழ்.வடமராட்சியில் உள்ள மந்திகை வைத்தியசாலையை உடனடியாகவே தரம் உயர்த்துவதற்கு சிறிலங்கா சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ், அரசாங்க அதிபரூடாக இத்தரமுயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதே வேளை தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம் சி.சிவநேசன் ஆகியோரும் சுகாதார அமைச்சிடம் இது குறித்து ஏற்கனவே பலதடவைகள் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (33)

# உள்ளீடுகள் பெறுவதில் நெருக்கடி; உப உணவுப் பயிர்ச் செய்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தரமான விவசாய உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதில் தோன்றியுள்ள நெருக்கடி நிலைமைகள் காரணமாக இங்கு உப உணவுப் பயிர்ச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்தகாலங்களில் உப உணவுப் பயிர்களான கௌப்பி, பயறு, உழுந்து, குரக்கன் போன்றவற்றின் உள்ளீடுகளுக்குத் தட்டுப்பாடு நிலவாதபோதும் இந்தாண்டு இவ் உள்ளீடுகளைப் பெற முடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

தரமான விதைஉள்ளீடுகள் கிடைக்காமையால் பலவிவசாயிகள் தமது உப உணவுப்பயிர்ச் செய்கையை இவ்வாண்டு கைவிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

# குருநகர் வீதி திருத்தப்படுமா?

(குருநகர்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள குருநகர் வீதி பல வருடங்களாக திருத்தப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுகிறது.

இதனால் இவ் வீதியூடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். இது குறித்து மாநகரசபையினரிடம் முறையிட்டும் உரியநடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.(33)

# 13 பேருக்கு அபராதம்

(நல்லூர்)

சட்டவிரோதமாக திருட்டு மின்சாரம் பெற்ற 13 பேருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

சுன்னாகம் மின்சாரசபை ஊழியர்கள் உடுவில்,கட்டுடை, சங்குவேலி, மானிப்பாய் பகுதிகளில் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது இந்த 13 பேரையும் நீதிமன்றின் முன் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர்கள் 13 பேரும் தமது குற்றத்தை நீதிமன்றின் முன்பாக ஒப்புக் கொண்டனர். (41)

-மன்னார் பெரியநாவற்குளம், நாகதாழ்வுப் பகுதிகளில்

# சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கையால் 267 குடும்பங்கள் அகதிகளாக வாழ நிர்ப்பந்தம்!

(மன்னார்)

**மன்னார் பெரியநாவற்குளம், நாகதாழ்வு போன்ற பகுதிகளில் வசித்து வந்த மக்கள் நீண்ட காலமாக அகதிகளாக வாழ சிறிலங்கா அரசினால் நிர்ப்பந்திக் கப்பட்டுள்ளனர். கடந்த எட்டு வருடகாலமாக முருங்கன் ஜீவோதய அகதிமுகா மில் இவர்கள் வசித்துவருகின்றனர்.**

இப்பிரதேச மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்ல விருப்பம் தெரிவித்த போதிலும் இவர்களது வாழ்விடங்கள் சிறிலங்கா இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகட னப் படுத்தப்பட்டுள்ளதால் அங்கு சென்று குடியேற முடியாத நிலை தொடர்ந்து காணப்படுகிறது. மேற்படி அகதி முகாமில 267 குடும்பங்கள் இவ்வாறு தங்கியுள்ளன. இவர்களுக் கான தற்காலிக கொட்டகைகளையும உலர் உணவு பொருட்களையும் முருங்கன் ஜீவோதய நிர்வாகத்தினர் வழங்கி வருகின் றார்கள்.

வடக்கு- கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் அரசுக்கும்- புலிகளுக்கு மிடையிலான புரிந்துணர்வு உடன் பாட்டுக்குப் பின்னரும் சிறிலங்கா இராணுவ உயர் பாதுகாப்பு வலயங் கள் என்ற போர்வையில் பெருமள வான தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர முடி யாத நிலைமை சிறிலங்கா அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளமை தெரிந்ததே.



சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்களுக்கு உடுபுடவைகளையும் மற்றும் உடுத்துறை மகாவித்தியாலய மாணவர் களுக்கு சீருடை மற்றும் கற்கை நெறிக்கான அப்பியாசப் புத்தகங் களையும் இலங்கை செஞ்சிலுவை சங்கத் தலைமைச் செயலக தலைவர் ஜெகத் அபேசிங்க மற்றும் குழுவின் வடமராட்சி கிழக்கு உடுத்துறை ம.வி.யில் வைத்து வழங்கியதை படத்தில் காணலாம். (சோதி)

## மாலைநேரக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பரிசளிப்பு

அக்கராயன் கண்ணகிபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் கடந்த வெள்ளிக் கிழமை மாலை 6.00 மணிக்கு மாலை நேரக் கல்வி மாணவர்களுக்கான திறனாய்வுப் பரிசளிப்பு விழா நடை பெற்றது.

இந் நிகழ்வில் மங்கல விளக் கினை கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழிலன் பனும், கண்ணகிபுரம் பாடசாலை அதிபர் கணேசமூர்த்தியும் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை அக்கராயன் பிரதேசப் பொறுப்பாளர் திருமாறன் ஏற்றிவைத்தார். பொதுச் சுடரினை கிளிநொச்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.சிறி ஏற்றி வைத்தார். க்ண்ணகிபுரம் அ..த.க பாடசாலையில் கல்விகற்ற முதல் மாவீரரான வீரவேங்கை சந்தனாவின் திருவுருவப்படத்திற்கு அவரின் தயார் ஈகச்சுடர் ஏற்றி, மலர் மாலை அணி வித்தார். தொடர்ந்து கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப் புப் பொறுப்பாளர், கண்ணகிபுரம் பாடசா லை அதிபர் கணேசமூர்த்தி ஆகி யோர் வழங்கினர். சிறப்புரையினை கிளிநொச்சி கோட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இ.சிறி நிகழ்த்தினார். பின்பு பாடசாலை மாணவர் களின் கலை நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. இந் நிகழ்வில் 15 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப் பட்டது.இந்நிகழ்வில் நூற்றுக்கணக் கான மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

## வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்திற்குஉதவ துரித காணிச் செயலணிக் குழு அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

வட-கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்திற்கு உதவும் வகை யில் மாவட்ட ரீதியாக துரித காணிச் செயலணி அமைக்கப் பெற்று நடை முறைப்படுத்தப் பெற்று வருகின் றது. மேற்படி செயலணியில் மாவட்ட ரீதியாக உதவிக் காணி ஆணை யாளர் தலைமையில் காணி அலுவலர், குடி யேற்ற உத்தியோகஸ்தர், நில அளவை யாளர்,பட வரைஞர் உட்பட 16 பேர் இடம் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த வாரம் மேற்படி செயலணி நடவடிக்கைகளை ஆரம்பித் துள்ளது. கிளி மாவட்ட துரித காணி செயலணி உதவிக்காணி ஆணையாளர் சீ.சிவசொருபநாதபிள்ளை தலைமை யில் மேற்படி நடவடிக்கைகள் ஆரம்பிக் கப் பட்டு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## பூநகரியில் பால் உற்பத்தியை மேம்படுத்த பிரதேச செயலர் தலைமையில் முயற்சி

(அலுவலகசெய்தியாளர்)

பூநகரி திக்குவில் கிராமத்தில் பூநகரி பிரதேச செயலரின் தலைமையில் பால் உற்பத்தியாளர் சந்தைப்படுத்தும் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பெற்று அதனை முன்கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன. முதல் நடவடிக் கையாக மேய்ச்சல் தரவைகளில் புற்கள் நடும் பணிகள் ஆரம்பிப் பதற் கான நடவடிக்கைகள் மேற் கொள் ளப்பட்டு வருவதுடன் பசுக்களை சேகரித்து பண்ணையாக்கி நல்லிணக் காளைகள் மூலம் சினைப் படுத்தல் நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பெற்று அதன் மூலம் நல்லினப் பசுக்களை உருவாக்குவதே முக்கிய குறிக்கோள் எனவும், இதன் மூலம் இப் பகுதியில் பால் உற்பத்தியினை திட்டமிடல் நடவடிக்கை மூலம் மேம்படுத்த முடியுமென பூநகரிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (சோ)

### மன்னார் பொது வைத்தியசாலைக்கு ஒன்பது மருத்துவ தாதியர் நியமனம்

(மன்னார்)

நீண்டகாலமாக மன்னார் பொது வைத்தியசாலையில் நிலவி வந்த மருத்துவ தாதியாருக்கான பற்றாக்குறை தற்சமயம் நீங்கியுள்ளது. கடந்த முதலாம் திகதி முதல் ஒன்பது மருத்துவ தாதியர்கள் நியமனம் பெற்று சேவை செய்து வருகின்றார்கள் அதே வேளை யில் சில குறிப்பிட்ட நோய்களுக்கான நிபுணத்துவம் பெற்ற வைத்திய நிபுணர் களும் நியமனம் செய்யப்படவிருப் பதாகவும் தெரியவருகிறது. (18)

## பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு கடந்த வியாழக்கிழமையன்று பரந்தன் பிரதேச அரசியல் துறை செயல கத்தில் நடைபெற்றது. கண்டாவளைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப் பாளர் வின்சன் முன்னிலையில் பரந்தன் பிரதேச அரசியல் துறைப் பொறுப் பாளர் சிவா தலைமையில் நடைபெற்ற மேற்படி பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாகத் தெரிவு நிகழ்வில் செயலராக ப.நாகேந்திரம் துணைச் செயலராக க.ஸ்ரீகாந்ததாஸ் பொருளாராக பெ.இராமசாமி மற்றும் ஆறு நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பெற்றனர். (சோ)

## தொழிற் சங்கங்களின் இணைய பொதுக் கூட்டம்

(மன்னார்)

மன்னாரில் தொழிற்சங்கங்களின் இணைய பொது கூட்டம் நேற்று முன்தினம் காலை 10.30 மணியள வில் நகரமண்டபத்தில் மேற்படி இணையத்தின் பொறுப்பாளர் ஈழப் பிரியன் தலைமையில் இடம் பெற் றது.

இக்கூட்டத்திற்கு எறத்தாழ 75 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங் களின் பிரதிநிதிகள் சமுகம் கொடுத் தார்கள் இந்தக் கூட்டத்தில் சமகால நிகழ்வுகள் பற்றியும் இணையத்தின் செயற்பாடுகள் பற்றியும் மேற்படி இணையத்தின் பொறுப்பாளர் ஈழப்பிரியனால் விளக்கம் கொடுக் கப்பட்டது.

இணையத்தின் யாப்பு தொடர்பா கவும் கருத்துகள் வெளியிடப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அத்து டன் எதிர்வரும் மே தின விழாவை கொண்டாடும் ஒழுங்குகளும் மேற் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. (18)

## கிராமங்களை தேசத்தின் மூலங்களாக்கும் கிராமிய அபிவிருத்தி வங்கி

கிராமிய மக்களின் வாழ்க்கை முறையில் நிதிசார் பலத்தை கட்டியெழுப்புதல் என்ற முதன்மை நோக்கத்தோடு 1993.03.14 ஆம் திகதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கிராமிய நிதியம் (Rural Fund) என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி வங்கியானது இன்று 12 வருட செயற் பாட்டு நிறைவைத் தனதாக்கி கம்பீரமுடன் எழுந்து நிற்கிறது.

மோசமான வறுமை, தொடர்யுத்தம், புதிய முதலீடின்மை,




வருமானவாய்பின்மை, சேமிப்பு தேய்வடைந்தமை என கடந்த இரு தசாப்தங்களில் தமிழீழக் கிராமங்கள் எதிர் கொண்ட பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கெதிராக கிராமிய மக்களின் தொழிற்றுறைகளுக்கு ஆதரவாக அவர்களுக்குரிய செயற்பாட்டு நிதியை பங்களிக்கும் சேவையில் வடகிழக்கு மாவட்டங்களில் கிராமிய அபிவிருத்தி வங்கி ஆற்றி வரும் செயல்பாடுகள் பொறுப் பாந்த ஒரு தன்மைவாய்ந்தமை, விவசாயிகளுக்கும் சிறு முதலீட்டாளருக்கும் அவர்களது வீட்டுவாசல் தேடிச் சென்று கடன் வழங்கும் நிறுவனமாக இது இருப்பதால். வங்கி ஒன்றுக்குள்ள மக்களின் பயம் இங்கு காணப்படுவதில்லை.

விவசாயிகளுக்கென சிறுபோகக் கடன், காலபோகக் கடன், மேட்டுநில செய்கைக் கடன், ஆகியனவும் சுயதொழில் முயற்சி யாளர்களுக்கென கால் நடை வளர்ப்புக் கடன், கைத்தொழில்ற் கடன், சிறுவியாபாரக்கடன், ஆகியனவும், நீண்டகால நிதித் தேவைகளுக்காக தொழிற் துறை மேம்பாட்டுக்கடனும், விசேட கடன் திட்டங்களாக புதிய உழுபொறிக்கடன் திட்டம், சூரிய ஒளிமின் இணைப்புக் கடன் திட்டம், உந்துருளிக் கடன் திட்டம், ஆகியன செயற்படுத்தப் பட்டுவருகின்றன.

சூரிய ஒளி மின் இணைப்புக்கடன் திட்டமானது இதுவரை 342 குடும்பங்களுக்கு மின்னொளியை பெற்றுக் கொடுத் துள்ளது புதிய உழுபொறிக்கடன் திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் 1545000 ரூபா பெறுமதியான 15 உழுபொறிகள் கொள்வனவு செய்துவந்து பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் கடன் திட்டத்தினூடாக இதனது செயற்பாடு களுக்குள் 24837 வாடிக்கையாளர்கள் 35 கோடி தொண்ணூற்று ஏழு இலட்சம் ரூபா வரை கடன் பெற்றிருக்கிறார்கள். இதில் விவசாயக்கடனாக 14539 பேரும், சுயதொழில் முயற்சிக்காக 10298 பேரும், கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.

கடன் நடவடிக்கைக்கான முயற்சிகள் மட்டுமன்றி கிராமிய சேமிப்பையும், கிராமிய முதலீட்டையும் ஏற்படுத்துவதற்காக பல்வேறு சேமிப்பு ஊக்கப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. நலிந்து போன தேசத்தின் பொருண் மியத்தை மீளக் கட்டியெழுப்புவதில் எமது சொந்த நிதியாதாரங் களின் பங் கினை இவை உறுதி செய்துள்ளன. சாதாரண சேமிப்பு, நிலையான வைப்புக்கள், விவசாய முதலீட்டு சேமிப்பு, சிறுவர் களின் எதிர்கால நலனுக்காக தளிர் சேமிப்பு, என்பன குறிப்பிடத் தக்கவை.


சேமிப்பு மற்றும் கடன் வழங்கல் சேவைகளை எமது தாயகத்தின் பல்வேறு பகுதிமக்களுக்கும் ஒருங்குசேரப் பெற்றுக் கொள்வதற்கான உபசெயற்பாட்டு மையங்களாக பத்துக் கிளைகள் இயங்கிவருகின்றன திருகோணமலையில் சம்பூரி லும், மட்டக்களப்பில் கரடியனாற்றிலும், வவுனியாவில் கனகரா யன் குளத்திலும், மன்னாரில் அடம்பன் பகுதியிலும், முல்லைத் தீவில் மல்லாவி, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, ஆகிய பகுதிகளிலும் கிளிநொச்சியில் பூநகரி, கிளிநகர், ஆகிய பகுதி களிலும். முதன்மைக்கிளை வட்டக்கச்சியிலும் இதனது கிளை கள் சேவைகளை பகிர்ந்து வருகின்றன. புதிதாக வவுனியா, நெடுங்கேணியிலும் புதியகிளை நிறுவ முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதுவரையில் 45000 வாடிக்கையாளர்களை தனது வழமைதாரர்களாக கொண்டு இயங்கும் இவ்வங்கியானது தனது 12 ஆவது ஆண்டு நிறைவு நாளில் மன்னார்க் கிளையில் நகை அடகுசேவையை ஆரம்பிக்கின்றது என்பது மகிழ்ச்சிக் குரிய விடயமாகும். அத்துடன் இதன்கிளைகள் ஒவ்வொன்றாக கணனிமயப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தவகையில் முதலா வதாக வங்கியின் கிளிநொச்சி கிளை கணனிமயப்படுத் தப்பட் டுள்ளது.

அத்துடன் தனது முகாமைத்தீர்மானங்களை முகாமைத்

### இன்று பன்னிரண்டாவது ஆண்டு சேவையை நிறைவு செய்கிறது

துவப் பணிப்பாளர் சபை கட்டமைப்பின் கீழ் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. தாயகத்தின் பொருண்மியக் கட்டுமானத்தை உறுதி யாக கட்டியெழுப்புவதில் இவ்வங்கியின் 12 வருடகால சேவை யை மதிப்பீடு செய்யும் போது திருப்திதருகின்றது. எனினும் புதிய சவால்களை சமாளித்து கிராமியப் பொருளா தாரத்தில் மலர்ச்சியை கொண்டுவருவதில் இது இன்னும் சாதிக்க நிறையவே உள்ளது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



வானிலையாளர்கள் முன்னறிவித்தல் கொடுப்பதிலிருந்து தவறிய நிலையில் அவுஸ்திரேலியாவின் மேற்கு கரை டார்வின் நகருக்கு அண்மையில் மேலும் ஒரு சூறாவளி மையம் கொண்டிருக்கிறது.

## தாய்லாந்தில் விமான விபத்து விமானி உட்பட மூவர் பலி

(பாங்கொக்)

தாய்லாந்து நாட்டில் சனிக் கிழமை நிகழ்ந்த விமான விபத்தில் மூவர் உயிரிழந்தனர்.

இந்தச் சிறிய விமானம் தனியாருக்குச் சொந்தமானது. தாக் மாகாணத்திலுள்ள பூமிபால் விமான நிலையத்தில் இந்த விமானத்தைத் தரையிறக்க அதன் விமானி முயன்றார். அப்போது விமானம் தீப் பிடித்து வெடித்துச் சிதறியது. இதில் விமானத்தின் விமானி, அவர் மனைவி மற்றும் உறவினர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்தனர். விமான விபத்துக்கான காரணம் தெரியவில்லை.

## அமெரிக்க நீதிமன்றில் பயங்கரம்; நீதிபதி உட்பட மூவரைக் கொன்றார் கைதி

(நியூயோர்க்)

அமெரிக்காவில் கைதி ஒருவர் நீதிமன்றில் நீதிபதி உட்பட இரண்டு பேரைக் கொன்று விட்டு வேறு சில அலுவலர்களை பிணையாளிகளாகப் பிடித்த பயங்கர சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

பரபரப்பான இச் சம்பவம் அட்லாண்டா நீதிமன்றில் வெள்ளிக்கிழமை நடந்தது. அந்தக் கைதியின் பெயர் பிரியன் நிகோலஸ் (33வயது) பாலியல் வல்லுறவு மற்றும் வேறு சில குற்றச் சாட்டுகள் அவர் மீதுள்ளது.

அவர் நீதிமன்றத்திற்கு,பெண் பொலிசின் காவலுடன் அழைத்து வரப்பட்டார். நீதிமன்ற வளாகத்தில் நுழைந்தபோது திடீரென்று அவர் அந்தப் பெண் பொலிசிடமிருந்து துப்பாக்கியைப் பறித்துக் கொண்டு நீதிமன்றத்திற்குள் ஓடினார். சில அலுவலர்களை பிணையாளிகளாகச் சிறிது நேரம் பிடித்து வைத்தார். இதைத் தொடர்ந்து தமது வழக்கை விசாரிக்கவிருந்த நீதிபதி ரவ்லண்ட் பர்ன்ஸைச் சுட்டுக் கொன்றார். பின்னர் நிருபர் ஒருவரையும் ,பொலிஸ் அதிகாரியையும் சுட்டுக் கொன்றார். நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த நிருபர் ஒருவரின் காரில் ஏறித் தப்பித்தபோதும் பின்னர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# மற்றைய நாடுகளின் உள்விவகாரத்தில் தலையீடு; அமெரிக்கா மீது வெனிசுலா , ஈரான் குற்றச்சாட்டு

(காரகாஸ்)

**மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தேவையின்றி அமெரிக்கா தலையிட்டுக் குழப்பம் ஏற்படுத்தி வருகிறது. என்று வெனிசுலா மற்றும் ஈரான் நாடுகளின் சனாதிபதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.**

ஈரான் சனாதிபதி முகமது கடாமி மூன்று நாள் அரசு முறைப் பயணமாக வெனிசுலா நாட்டுக்கு வெள்ளிக்கிழமை சென்றார். அவரை வெனிசுலா சனாதிபதி ஹுகோ சாவெஸ் வரவேற்றார்.

உலகில்பயங்கரவாதமும், ஏகாதிபத்தியமும் ஒழிந்து அமைதியும், பாதுகாப்பும் நிலவ வேண்டும் என இரு சனாதிபதிகளும் கூட்டாக விருப்பம் தெரிவித்தனர்.


அணுசக்தி வளத்தை மேம்படுத்துவதில் ஈரான் ஈடுபாடு காட்டி வரு கிறது. இதற்கான உரிமை ஈரானுக்கு உள்ளது. இதைத் தடுக்கும் உரிமை அமெரிக்காவுக்கு இல்லை என்று ஈரான் சனாதிபதி முகமது கடாமி குறிப்பிட்டார்.

அவரது கருத்தை வெனிசுலா அதிபர் ஹுகோ சாவெஸும் ஆதரித்துப் பேசினார்.

பயங்கரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரால் பிற நாடுகளின் உள் விவகாரங்களில் அமெரிக்கா தேவையின்றித் தலையிட்டுக் குழப்பம் ஏற்படுத்தி வருகிறது என இரு நாடுகளின் சனாதிபதி குற்றம் சாட்டினார்.

பயங்கர அணுஆயுதங்களை ரகசியமாக ஈரான் தயாரித்து வருகிறது என அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது. இத்தகைய ரகசிய நடவடிக்கைகளை நிறுத்துமாறும் ஈரானை அமெரிக்கா மிரட்டி வருகிறது.

இதேபோன்று வெனிசுலா அதிபரையும் அமெரிக்கா மிரட்டி வருகிறது. வெனிசுலா



சனாதிபதி சாவெஸ் சனநாயக நடைமுறைகளுக்கு விரோதமாகச் செயற்பட்டு வருகிறார். அவருடைய செயற்பாடுகளால் லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டு வருகிறதென அமெரிக்கா புகார் கூறியுள்ளது.

## அதிவேக ரயில் தடம்புரண்டது வியட்னாமில் 11 பேர் பலி ;200பேர் காயம்


(ஹனோய்)

வியட்னாமில் ஹனோய் நகரில் இருந்து 1700 கி.மீ தொலைவிலுள்ள ஹோசிமின் நகருக்கு 500 பயணிகளுடன் சென்று



கொண்டிருந்த ரயில் தடம்புரண்டதில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் அவர்கள் அங்குள்ள வைத்தியசாலையில் ஹனோய் உட்பட பல்வேறு நகரங்களிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மீட்புப் பணியில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. வழக்கமாக இந்த ரயிலில் வெளிநாட்டவர்கள் அதிகமாகப் பயணம் செய்வார்கள் எனவே வெளிநாட்டவர்கள் சிலரும் இதில் பலியாகி இருக்கலாம் என்று தெரிகிறது.




ஈராக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிலிப்பைன்ஸ் கைதியான றொபர்ட்டரங்குகாயை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி மணிலாவில் காவலரண் ஒன்றின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தும் பிலிப்பைன்ஸ் பெண்

## பலத்த வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் தீவிரவாத ஒழிப்புச் சட்டம் நிறைவேறியது

(லண்டன்)

இங்கிலாந்தில் கடந்த 2001 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீவிர வாதிகள் ஒழிப்புச் சட்டம் இன்றுடன் முடிவடைகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டைச் சேர்ந்த எட்டுப் பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். சட்டம் காலாவதியாவதைத் தொடர்ந்து இங்கிலாந்து பாராளுமன்றத்தில் புதிய மசோதா தாக்கல் செய்யப் பட்டது. இந்த மசோதா மீது பிரபுக்கள் சபையில் 31 மணி நேரம் கடும் விவாதம் நடந்தது. புதிய சட்டத் துக்கு பலர் எதிர்ப்புத் தெரிவித் தார்கள். புதிய சட்டசரத்துக்கள் பற்றி ஓராண்டுக்குள் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத் தினார்கள் இதற்கு பிரதமர் டொனி பிளேயர் சம்மதம் தெரிவித்தார்.

## பெண்களுக்கு போதிய அதிகாரம் அளிக்க ஐ.நா.மாநாட்டில் வலியுறுத்தல்

(நியூயோர்க்)

பெண்களுக்கு போதிய அதிகாரம் அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐ.நா சபையில் நடைபெற்ற பெண்களுக்கான பாலியல் சமத்துவம் குறித்து மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

இம் மாநாட்டில் பங்கேற்ற பல்வேறு பிரதிநிதிகளும், பெண் களுக்கு எதிராக உலகளாவிய அளவில் நடந்து வரும் கொடுமை களைப் பட்டியலிட்டனர்.

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட கணவனுடன் உறவு கொள்வதை மறுக்கும் உரிமை கூட ஆபிரிக்க நாடுகளில் பெண்களுக்கு இல்லை சம்பிரதாயம், சமுதாய வழக்கம் ஆகியவற்றின் பேரில் பெண்கள் பழிக்கப்படுகின்றனர் என்று அவர்கள் குற்றம் சாட்டினர்.

பெண்களின் நிலை குறித்து ஐ.நா. அளித்த அறிக்கையில் இன்ன மும் பல துறைகளில் பாலின சமத்து வம் ஏற்படவில்லை என்பது கண்ட றியப்பட்டுள்ளது.

பெண்களுக்கு அதிகாரம் வழங்கு வது என்பது வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்கான பிரதான கருவி எனவே அனைத்துத் துறை களிலும் பாலின பாகுபாட்டை ஒழித்து பெண்களுக்குப் போதிய அதிகாரம் வழங்க அனைத்து நாடுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாநாட்டில் வலியுறுத்தப் பட்டது.



"மிஸ் ஐரோப்பா" அழகிப் போட்டி பிரான்சு நாட்டின் பரிஸ் நகரில் நடந்தது. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 36 அழகிகள் இதில் கலந்து கொண்டனர் இதில் ஜேர் மனியைச் சேர்ந்த ஷெர்மின் ஷாரிவார் "மிஸ் ஐரோப்பா" அழகியாக கிரீடம் சூடிக் கொண்ட காட்சி.



வியட்னாமில் அரச ஊழியர் கள் மத வழிபாடு கள் தொடர்பாகப் பிரயாணம் செய் வதை புஷ் நிர் வாகம் தடை செய்துள்ள நிலை யில் ஹனோயில் இரு பெண்கள் வழிபாட்டில் ஈடுபடுகின்றனர்

## 30 ஆண்டுகளின் பின் லெபனானிலிருந்து சிரியப்படை வாபஸ் ஆரம்பம்

(டமாஸ்கஸ்)

லெபனானிலிருந்து சிரிய நாட்டுப் படைகளை வாபஸ் பெறும் பணி சனிக்கிழமை தொடங்கியது. 60 வாகனங்களில் சிரிய வீரர்கள் லெபனானிலிருந்து முதற்கட்டமாக வெளியேறினர்.

கிட்டத்தட்ட 30 ஆண்டு காலமாக சிரியா தனது படைகளை லெபனானில் நிறுத்தியிருக்கிறது. இதற்கு சர்வதேச சமுதாயமும், லெபனானின் எதிர்க்கட்சிகளும் கடும் ஆட்சேபம் தெரிவித்து வந்தன.

லெபனானிலிருந்து சிரியாவின் படைகள் முழுவதுமாக விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று ஐ.நா. முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. எந்தெந்தத் திகதியில் எவ்வளவு வீரர்கள் வாபஸ் பெறப்படுவர் என்பது குறித்துப் பேச ஐ.நா பிரதிநிதியும், படை வாபஸ் தொடங்கும் நாளில் சிரியாவுக்கு வந்து சேர்ந்தார்.

# சர்வசன வாக்கெடுப்பா? சனாதிபதித் தேர்தலா?



## மகிந்தவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்

அண்மையில் சிறிலங்காவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றின் போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றும்போது பார்வையாளர்கள் மிகுந்த கரகோஷம் செய்தும், விசிலடித்தும் பெரும் வரவேற்பைக் காட்டியிருந்தனர். அதனைக் கூட்டத்துக்கு சமுகமளித்திருந்த சந்திரிகாவும் பார்த்துப் பெரிதும் ஆச்சரியமடைந்திருக்கிறார். அதனை அவர் வாயாலேயே இப்படிக் கூறியிருக்கின்றார். "உங்களுக்கும் இப் போது நல்லா விசிலடிககிறார்களே" என்று.

அந்தக் கூட்டம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் சம்மேளனம் ஒழுங்கு செய்த கூட்டமாகும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் சம்மேளனம் என்பது சாதாரணமாகக் கருதக் கூடிய ஒன்றல்ல. அது கட்சிக்குள் பெரும் சிக்கலையும் மாற்றத்தையும் ஏற்படுத்திய ஒரு அமைப்பாகும்.

1992 ஆம் ஆண்டு சிறிமாவுக்கும், அனுரா பண்டாரநாயக்காவுக்கும் இடையில் முறுகல் ஆரம்பமானது. இந்த அமைப்பின் மாபெரும் கூட்டம் ஒன்றின்போதே. அப்போது கட்சிக்குள் ஆட்டம் காணும் நிலையிலிருந்த சிறிமாவுக்குப் பின்னர் கட்சித் தலைமைப் பொறுப்பை அனுரா ப்ண்டாரநாயக்கா ஏற்க முயற்சிசெய்தார். அப்போது அவருக்கு பாதுகாவலனாக இருந்தவர் மகிந்த ராஜபக்ஷ ஆவார். அவரின் உதவியுடன் கட்சித் தலைமைப் பொறுப்பை அனுரா பெற முயற்சிக்கும் வேளை சந்திரிகாவும் மங்கள சமரவீரவும், எஸ்.பி திஸாநாயக்கவும் அதனைப் பொறுக்கவில்லை. இதன் காரணமாக அன்று 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற கட்சியின் இளைஞர் சம்மேளனம் ஒழுங்கு செய்த கூட்டத்தின் பின்னர் அனுரா கட்சியிலிருந்து விலகினார்.

அதன் பின்னர் 2000 ஆம் ஆண்டில் கட்சிக்குள் ஏற்பட்ட உட்பூசலினால் எஸ்.பி திஸாநாயக்கா கட்சியை விட்டுச்சென்றார். அதுவரை சந்திரிகாவின் வலக்கரமாக எஸ்.பி செயற்பட்டு வந்தார். அன்றும் மேற்கூறப்பட்ட கட்சியின் இளைஞர் சம்மேளனம் ஒழுங்கு செய்த கூட்டத்தின் போதே உட்பூசல் தோன்றியது. கட்சியின் செயலராக இருந்த எஸ்.பி திஸாநாயக்கா தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இளைஞர் சம்மேளனத்தின் தலைவராக தனது ஆதரவாளர் ஒருவரை தேர்ந்தெடுத்தார். அதனை சந்திரிகா விரும்பவில்லை. அதாவது கட்சியதிகாரம் திஸாநாயக்காவிடம் செல்வதை அவர் விரும்பவில்லை.

எஸ்.பி.யின் செயலைத்தடுக்க இளைஞர் அமைப்பையே பயன்படுத்தினர். விளைவு எஸ்.பி. கட்சியை விட்டு விலகினார். அதன் நன்மையை மகிந்த ராஜபக்ஷ அடைந்தார். அதன் மூலம் அவர் எதிர்க்கட்சித் தலைவராகி பிரதமராகி தற்போது சனாதிபதியாகும் கனவுடன் இருக்கிறார்.

இந்தப் பின்னணியிலேயே 2005 ஆம் ஆண்டுக்கான கட்சியின் இளைஞர் சம்மேளனத்தின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மகிந்தவுக்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்கின்றது.(விசிலடிப்பது உட்பட) அது அவர் அடுத்த சனாதிபதியாகும் வாய்ப்பைப் பெறுவார் என்ற கருத்துப்படவும் இருக்கலாம். இதனை அனுமதிக்க முடியாத நோக்கிலும் பொறுமையை வெளிப்படுத்த முடியாமலும் இவ்வாறு சனாதிபதி உங்களுக்கும் நல்ல வரவேற்பு இருக்கிறது" என்று கூறியுள்ளார்.

ஏற்கனவே வருடாவருடம் கட்சிக்குள் உட்பூசலை ஏற்படுத்தும் இளைஞர்கள் சம்மேளனக் கூட்டம் இவ்வருடமும் சந்திரிகா-மகிந்தவுக்கிடையில் குழப்ப நிலையை உருவாக்கி விடுமோ என்ற வினாவை எழுப்பியுள்ளது.

ஏனெனில் இளைஞர் சம்மேளனக் கூட்டம் நடைபெற்று ஒரு வாரம் முடியும் முன்பே சந்திரிகா கட்சி அமைப்பாளர்களைச் சந்தித்து உரையாடி தமது தற்போதைய பாதுகாவலரான மங்கள சமரவீர மூலமாக சனாதிபதித் தேர்தலுக்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரமுறையை ஒழிக்க அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவரும் அவசியத்தை அமைப்பாளர்களின் வாயாலேயே அறிந்து கொண்டமையானது மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆசனத்தை வழங்கி வீடு செல்லும் நோக்கில் அல்ல. அமைப்பாளர்களின் சந்திப்பின் போதும் மங்கள வியத்தகு வினா ஒன்றை எழுப்பியுள்ளார். தற்போது முக்கிய தேவையாக இருப்பது சனாதிபதித் தேர்தலா? அரசியலமைப்பு மாற்றமா? என்பதே அக்கேள்வி இக்கேள்வியின் மூலம் அவர் கட்சிமீதும் சந்திரிகா மீதும் வைத்துள்ள பற்றை வெளிக்காட்ட விரும்பியிருக்கலாம். அதை வேறு விதமாகக் கூறினால் சந்திரிக்காவா மகிந்தவா கட்சிக்கு மிகத் தேவைப்படுபவர் என்பதாகும். அமைப்பாளர்கள் சந்திரிகாவுக்கே தமது ஆதரவை வெளிக்காட்டியுள்ளனர்.அதனை செய்வித்தவர் மங்கள சமரவீர. சந்திரிகா ஆட்சியில் இருந்து கட்சித்தலைமையையும் தக்கவைத்தால் மங்கள சமரவீரவும் பாதுகாக்கப்படுவார்.

மகிந்தவை சனாதிபதி வேட்பாளராக்கி சனாதிபதியாக நியமிக்க சந்திரிகா எண்ணியிருப்பதாக அண்மையில் பத்திரிகைகள செய்திவெளியிட்டதில் மங்கள கலவரமடைந்தார்.

இதனைத் தொடர்ந்து மகிந்தவுக்கு வந்த தொலைபேசி அழைப்புக்களும் அவரை நேரடியாக சந்தித்துக் கதைப்பவர்களும் குறையவில்லை.

இவ்வாறு தெலைபேசி மூலம் உரையாடியோர் அடிக்கடி சனாதிபதி மாளிக்கைக்கும் செல்வதுண்டு. அதேவேளை பிரதமர் மகிந்தவின் அலரி மாளிகைக்கும்சென்று வருபவர்களாக இருந்தனர். இதனால் இவர்களுக்குள் ஒரு குழப்பநிலை தோன்றியிருக்கிறது. அதாவது மகிந்தவின் பக்கம் நிரந்தரமாக சாய்வதா சந்திரிகா பக்கம் சாய்வதா என்பதாகும்.

இதற்கிடையில் பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் மகிந்த நீண்ட பயண[illegible]ன்றை ஆரம்பித்திருப்பத[illegible] அவரே சிறிலங்கா சுத[illegible]க்கட்சியின் ரட்சகன் எனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். அத்துடன் 2006 ஆம் ஆண்டுக்கு முன்பாக சனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளார். இதனைக் கேள்விப்பட்ட மேற்படி மகிந்தவின் ஆதரவாளர்கள் ஐ.தே.க கட்சி உறுப்பினர்களை விட ஆச்சரியமடைந்துள்ளனர். ஏனெனில் மகிந்தவை சனாதிபதி வேட்பாளராக அறிவித்தால் 2006 வரை காலம் கடத்துவது அவசியமில்லை என்ற நோக்கில் அவர்கள் இருப்பதாகவும். இதனைத்தங்களுக்குள்ளேயே விவாதித்திருக்கின்றனர்.

ஆனால் இளைஞர் சம்மேளனக் கூட்டத்தை அடுத்து உடனேயே அமைப்பாளர்களின் கூட்டத்தைக் கூட்டி அரசியல் அமைப்பை மாற்றக் கோரும் பிரேரணை ஒன்றை முன்வைத்திருக்கும் சனாதிபதி சந்திரிகா இதன் மூலம் ஒழிக்க முயற்சிப்பது ரணில் விக்கிரமசிங்கவையா அல்லது மகிந்த ராஜபக்ஷவையா என்பது புரியாத புதிராகவுள்ளது.

**உப்புள் ஜோசப் பர்னாந்து (லங்காதீப)**
**தமிழில் வடிவேல்**

எனவே அரசியலமைப்பு மாற்றம் பிசகினால் கட்சி சனாதிபதித் தேர்தலில் தோல்விகண்டு விடும். அரசியலமைப்பை மாற்றுவதா இல்லையா என்பது தொடர்பான சர்வசன வாக்கெடுப்பு நடத்தி பின்னர் தேர்தலை நடத்தினால் மகிந்த அல்ல யாரை வேட்பாளராக நியமித்தாலும் மூக்குடைபடுவர். மகிந்தவுக்கும் இது தெரியும். அத்துடன் சனாதிபதித் தேர்தலை 2006 ஆம் ஆண்டு நடத்தினாலும் அரசியலமைப்பைப் மாற்றினாலும் பாதிக்கப்படுவது மகிந்த என்பது தெரியும்

ஆகவே மகிந்தவின் நோக்கம் எது[illegible]ாக இருக்கும். மகிந்த எதிர்க்க[illegible]சித் தலைவராக வந்ததும் பி[illegible]மராக வந்ததும் சந்திரிகாவின் விருப்[illegible]த்தினாலன்றி மகிந்தவின் பல[illegible]த்தினாலாகும். ஆயினும் இது சந்திரிகாவின் கட்சித் தலைமைக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. சனாதிபதி பதவிக்கும் அச்சுறுத்தல் இருக்கவில்லை. ஆனால் தற்போது சனாதிபதி வேட்பாளராக அவரை நியமித்தால் சந்திரிகாவுக்கு அது பெரும் பாதிப்பாகும். அத்துடன் கட்சித் தலைமைத் துவத்துக்கும் பெரும் பாதிப்பாகும்.

மகிந்த எதிர்க்கட்சித் தலைவராக வர அனுராவுடன் மோதினார். பிரதமராகவர கதிர்காமருடன் மோதினார். ஆனால் சனாதிபதிப் பதவிக்காக சந்திரிகாவுடன் இவரால் மோதி வெற்றி பெற முடியுமா? பதவியிலிருக்கும் சந்திரிகாவிடமிருந்து சனாதிபதி வேட்பாளர் பதவியை மோதல் ஒன்றின் மூலம் பெறமுடியாது.

அன்று 1988 ஆண்டு ஜே.ஆரிடமிருந்து பிரேமதாஸா சனாதிப் பதிப்பதவியை பெற்றுக் கொண்டது சண்டையிட்டல்ல. அவர் தனது மூளையைப் பயன்படுத்தியே அதனைப் பெற்றுக்கொண்டார். அன்று ஜே. ஆர் மூன்றாம் முறையும் சனாதிபதியாகப் பதவி வகிக்கும் வகையில் அரசியலமைப்பை மாற்றப் போவதை பிரேமதாஸா அறிந்தும் தாம் போட்டியிடாது அரசியலிலிருந்து விலகப்போவதாக அறிவித்தார். தானே சனாதிபதி வேட்பாளராக நிற்பது என முண்டியடிக்காது பொறுமையாக இருந்தார். எனினும் சனாதிபதி தேர்தல் நடைபெற மூன்று மாதங்களிருக்கும் நிலையில் ஜே.ஆர். பிரேமதா ஸாவை சனாதிபதி வேட்பாளராக அறிவித்தார்.

அதுபோன்றே மகிந்த ராஜபக்ஷவும் பொறுமையுடனும் தந்திரமாகவும் செயற்பட வேண்டும். ஆனால் மகிந்த பொறுமையுடன இருக்க. சந்திரிகா அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவந்து நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை ஒழித்துவிட்டு பிரதமராக வரலாம். அப்படி நிகழுமாயின் மகிந்தவுக்கு ஒன்றும் கிடைக்காது.

அந்த வகையில் அதிகார சனாதிபதி முறையை மாற்றுதல் தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு வெற்றிபெற்றால் ரணில் அல்ல மகிந்தவுக்கே கழுத்து வெட்டப்படும்.

ஆயினும் மகிந்தவுக்கும் நல்ல மதிப்பும், ஆதரவும் நிறையவே இருக்கிறது. அதனைப் பயன்படுத்தி மகிந்த சந்திரிகாவையும் பண்டாரநாயக்க பரம்பரையையும் ஆட்சிபீடத்திலிருந்து அகற்ற முடியும், இதுவும் ஒரு சர்வசன வாக்கெடுப்பாகவே இருக்கமுடியும்.






## 03.

➡ சீனாவில் சான்ஷி மாகாணத்தில் கெகேங் நகருக்கு அருகில் உள்ள பாடசாலைக்கு அருகிலுள்ள வீடொன்றிற்குள் வைத்திருந்த டைனமைற் வெடித்ததில் பாடசாலை இடிந்து விழுந்து மாணவர்களும், ஆசிரியர்களும் இடிபாடுகளுக்குள் சிக்கியதில் 20 பேர் பலி.


➡ ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்துறை அமைச்சின் செயலகத்திற்கு முன் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 5 பொலிசார் பலி.



➡ 2002 ஆம் ஆண்டு இடம் பெற்ற பாலிக் குண்டு வெடிப்பு சம்பவத்தில் 202 பேர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்த இந்தோனேஷிய முஸ்லிம் மதகுரு அபு பக்கர் பஷிங்கிற்கு அந் நாட்டு நீதிமன்றம் இரு வருட சிறைத் தண்டனை வழங்கியது.

➡ ஆப்கானிஸ்தானில் முதன் முறையாக மாகாண ஆளுநராக முன்னாள் அமைச்சரான ஹபீபா சரோபியா நியமனம் செய்யப்பட்டார்.

➡ ஆட்சியமைப்பதற்கு சிபுசோரனை அழைத்ததால் எழுந்த சர்ச்சை குறித்து விசாரிப்பதற்காக ஜார்க்கண்ட் மாநில ஆளுநர் சையது சிப்தே ராசின்கு சனாதிபதி அப்துல்கலாம் அவசர அழைப்பு விடுத்துள்ளார். இதற்கிடையே பாரதிய ஜனதா கூட்டணிக்கு இருக்கும் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காக அந்த அணியைச் சேர்ந்த 41 உறுப்பினர்கள் சனாதிபதி முன்பு அணி வகுப்பு நடத்தினர்.



## 04.

➡ நேபாளத்தின் மேற்கு நகரான சான்ட்கிக் கார்காவில் இராணுவம் நடத்தியதாக்குதலில் 30 மாவோயிட்ஸ் கிளர்ச்சிவாதிகள் பலி.

➡ அமெரிக்காவின் பல்வேறு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 47 மாணவ, மாணவிகள் பேராசிரியர்கள் எம்.வி.எக்ஸ்புளோரர் கப்பல் மூலம் சென்னை வந்து பட்டினப்பாக்கம் பாடசாலையில் சுனாமியினால் பாதிக்கப்பட் சிறுவர், சிறுமியரை உற்சாகப்படுத்தும் வகையில் ஆடிப்பாடிமகிழ்ந்தனர்.



➡ ஆந்திரா மாநிலத்தின் மேதக் மாவட்டத்தின் ஹக்கீம்பே விமானப் படைத்தளத்தில் மூன்று இருக்கை கொண்ட மிக்-21 ரக உலங்கு வானூர்தியொன்றில் விமானி ஒருவர் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளை உலங்கு வானூர்தி பவாண்டா மலைக் குன்றுக்கும் சர்வ பள்ளி கிராமப் பகுதிக்குமிடையில் விழுந்து விபத்துக்குள்ளானதில் பயிற்சியில் ஈடுபட்ட விமானி உயிரிழந்தார்.

➡ அமெரிக்காவைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஸ்டீவ் பாசெட் என்பவர் உலகத்தினைச் சுற்றி வரும் பொருட்டு அமெரிக்காவின் சலீனா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட இவர் மூன்று நாட்களின் பின்னர் இடைத்தங்கல் எதுவுமின்றி உலகத்தைச் சுற்றி புறப்பட்ட அதேஇடத்தை வந்திறங்கினர்.

➡ ஈராக்கில் செய்திசேகரிக்கச் சென்ற இத்தாலிய நிருபர் 'குலியானா கிரீனாவை' தீவிரவாதிகள் கடந்த மாதம் கடத்திச் சென்றனர். இவர்கள் விடுவிக்கப்பட்ட வேளை இத்தாலிய பத்திரிகையாளரும், இத்தாலிய உளவுப் படை அதிகாரியும் பயணித்த கார் மீது அமெரிக்க இராணுவத்தினர் மேற் கொண்டதுப்பாக்கிச் சூட்டில் உளவுப்படை அதிகாரி பலி; இத்தாலிய நிருபர் காயம்.

## 05.

➡ இந்தோனேஷியாவின் தவுலத்தீவுப் பகுதியில்ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் கட்டடங்கள் சேதமடைந்தது. இப் பூமியதிர்ச்சி ரிச்டர் அளவில் 6.1 புள்ளியாக பதிவாகியுள்ளது.



➡ ஹரியானா மாநிலத்தில் புதிய முதல்வராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பூவிந்தர் சிங்ஹிடா பதவியேற்பு.

## 06.

➡ நோர்வே நாட்டு எண்ணெய்க் கப்பல் ஜோர்ட் சம்பியன் ஏழு இலட்சம் தொன் எண்ணெய்யை ஏற்றிக்கொண்டு சோக்னி கடற்பகுதியில் சென்று கொண்டிருந்தபோது திடீரென தீப்பிடித்துக் கொண்டது. இதன் போதுகப்பலிலிருந்த 28 மாலுமிகள் உயிருடன் காப்பாற்றப்பட்டனர்.

➡ தென்னாபிரிக்காவில் 30 ஆயிரம் பாரஊர்தி ஓட்டுநர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட போது கலவரம் வெடித்து பொலிசாரை நோக்கி கற்களை வீசி தாக்கியதனால் வன்முறை உருப்பெற்றது.

➡ துருக்கியின் தலைநகர் ஸ்தான்புல் நகரில் ஆண்களுக்கு சமமாக தொழிற் சாலைகளில் வேலை செய்ய உரிமை கேட்டு பேரணி நடத்த முயன்ற பெண்கள் மீது பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ததில் 50இற்கும்மேற்பட்டபெண்கள் காயமடைந்தனர். பலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

➡ பிரிவினைக்கெதிரான சட்டமூலம் சீன நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் பட்டுள்ளதை எதிர்த்து சீனாவுக்கெதிராக தாய்வானில் மக்கள் பேரணி.



➡ இஸ்ரேலில் இடம்பெற்ற பாரியளவிலான வங்கியொன்றினூடாக நிதிமோசடி செய்தது தொடர்பாக இஸ்ரேலியப் பொலிசார் விசாரணை மேற்கொண்டதில் 25 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் 15 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

## 07.

➡ அவுஸ்திரேலியாவில் அனுமதியின்றிப் பணியாற்றிய 74 பேரை அவுஸ்திரேலிய குடியகல்வு- குடிவரவு திணைக்கள அதிகாரிகள் வெளியேற்றினர்.

➡ சவுதியரேபியாவில் இந்தியர் ஒருவரை கொலை செய்த சக இந்தியருக்கு ஹப்தார் அல்பத்தன் நகரில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. மரணதண்டனை பெற்றவர் சக இந்தியரின் தலையில் கல்லைப்போட்டு கொலைசெய்து பணத்தைத் திருடிச் சென்றிருந்தார்.

➡ கியூபாவின் குவாண்டனாமோ பகுதியில் அமெரிக்க அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்றுபிரான்ஸ் பிரஜைகளும் பிரான்ஸிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

➡ ஈராக்கின் வடகிழக்கு நகரான பகுபாவில் தீவிரவாதிகள் நடத்திய இரு தாக்குதல் சம்பவங்களில் அமெரிக்க மற்றும் ஈராக்கிய இராணுவ வீரர்கள், பொலிசார் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். 26 பேர் படுகாயம்.



➡ ஆப்கான் தலைநகர் காபூலில் வைத்து ஆப்கான் அரசாங்கத்தின் ஆலோசகராகக் கடமையாற்றிய பிரிட்டிஷ் பிரஜை மக்கியூன் என்பவர் ஆயுத தாரிகளினால் சுட்டுக்கொலை.

➡ குவைத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படவேண்டும் என்று கோரி நூற்றுக்கணக்கான பெண்கள் அந்நாட்டு பாராளுமன்றக் கட்டடத்திற்கு வெளியே ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

➡ ஆந்திராவில் நிசாமாபாத் மாவட்டத்தில் காவல்துறையினருக்கும், நக்சலைட்டுத் தீவிரவாதிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் பத்து தீவிரவாதிகள் பலி.

➡ பொலிவியாவின் சனாதிபதி கார்லோஸ்மீசா பதவியை ராஜினாமா செய்துள்ளார். இவரது பொருளாதாரக் கொள்கைகள், நிர்வாக நடவடிக்கைகள் ஆகியவற்றை எதிர்த்து பொதுமக்களும், எதிர்க்கட்சியினரும் கலவரத்தில் ஈடுபட்டதையடுத்தே தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

## 08.


➡ மலேசியா தமது எண்ணெய் வயல்களைச் சூறையாடுவதைத் தடுக்கக் கோரியும், மலேசியாவை அடக்கக்கோரியும் யகார்த்தாவிலுள்ள மலேசியத்தூதரகம் முன்பு இந்தோனேஷிய பரா இராணுவத்தினரும், பொதுமக்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




➡ சர்வதேச மகளிர் தினத்தில் ஈராக்கில் பல சர்வதேச தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு மகளிர் தின நிகழ்வைக் கொண்டாடினர்.

➡ லத்தீன் அமெரிக்க நாடான டொமினிக்கன் குடியரசின் ஹெகிநகரில் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள சிறைச்சாலையொன்றில் ஏற்பட்ட களேபரத்தினால் ஏற்பட்ட தீயில் 133 கைதிகள் உடல்கருகிப் பரிதாபகரமாகப் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர். சிறைச்சாலையிலிருந்த பல்வேறு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலே இத் தீ அனர்த்தம் ஏற்படக்காரணமாகும்.

➡ சர்வதேச அழுத்தம் காரணமாக லெபனானில் நிலை கொண்டிருந்த சிரிய நாட்டுத்துருப்புக்கள் எல்லைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் வேளையில் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் சிரியாவிற்கு ஆதரவாக மாபெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. இதில் லட்சக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.



➡ செச்சினிய விரவாத இயக்கத் தலைவரான மஸ்காடோவ்ரஷ்யப் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

➡ ஈராக்கின் மேற்குநகரில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் 19 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

## 09.

➡ ஈராக்தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற தற்கொலைக் கார்குண்டுத் தாக்குதலில் இரு பாதுகாப்புப்படையினர் கொல்லப்பட்டதுடன், 93 பேர் காயமடைந்தனர். இத்தாக்குதல் விவசாய அமைச்சுக்கும் விடுதியொன்றுக்குமிடையில் இடம்பெற்றது.



➡ கிழக்கு சீனாவில் ஷான்டோஸ் மாகாணத்திலுள்ள வினில் நகரில் ஆரம்பவகுப்பு மாணவர்கள் 21 பேர் சென்ற பேருந்து திடீரென தீப்பற்றியதில் 12 சிறுவர்கள் பரிதாப மரணம், ஐந்து பேர் காயமடைந்தனர்.

➡ ஐக்கிய நாடுகள் சபையின் யுத்த குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ள கொசோவோ பிரதமர் ராமுஷ்ஹரதினாஜ் தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

➡ தென்கொரிய சரக்குக் கப்பலான "சன்கு ரோஸ்" கப்பல் சீனாவிலிருந்து ஜப்பானுக்கு உருக்கு ஏற்றிச்சென்ற போது மஞ்சற்கடலில் சீனகொள்கலன் கப்பலொன்றுடன் மோதி கடலுக்குள் மூழ்கியதில் 13மாலுமிகள் காணாமல் போயுள்ளனர்.கிழக்குச்சீனத்துறை முகமான குயிங்விலிருந்து 135 கடல்மைல் களுக்கப்பால் இவ்விபத்து இடம்பெற்றது.

# பணிநிலை வெற்றிடங்கள்

## நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

## வடக்கு - கிழக்கு மாகாணசபை

## வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டம் (நெகரப்)

**வடக்கு-கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாணத்திட்டத்தின் (நெகரப்) செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து (IDA) கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது.**

**நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சும், வடக்கு கிழக்கு மாகாணசபையும் இணைந்து கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியும் அனுபவமும் வாய்ந்த பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்கின்றது.**

### பொதுவான நிபந்தனைகள்

1) இந்தப்பதவிகள் தற்காலிகமானவை, அத்துடன் நியமனங்கள் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையிலானவை. தேவையையும் செயற்படும் ஆற்றலையும் பொறுத்து ஒப்பந்தக் காலம் நீடிக்கப்படும்.

2) நியமனம் பெறுவோர் வடக்கு- கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணப்பிரிவின் திட்டப் பணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் பணிபுரிவர்.

3) இந்த நியமனத்தை சிபாரிசாக பயன்படுத்தி அரச அல்லது கூட்டுத்தாபனத்துறைகளில் நிரந்தர வேலைவாய்ப்பு எதனையும் பெறுவதற்கு நியமனதாரருக்கு உரிமை இல்லை.

4) தெரிவு செய்யப்படுவோர் வடக்கு- கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டத்தில் எந்தப் பகுதியிலாவது சேவையாற்ற வேண்டும்.

5) **வயதெல்லை:-** விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், 60 வயதிற்குக் கீழ்ப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். 55 வயதுக்குக் கீழ்ப்பட்ட விண்ணப்பதாரி களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஏற்கெனவே அரச சேவையில் பணியாற்றுவோருக் கும், அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றோருக்கும் இந்த வயது மேலெல்லை கணிக் கப்படமாட்டாது.

6) **ஊதியம்:-** 26.12.2000 அன்று வெளிவந்த முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபம் இல. 10 இன்படியான பந்தி 4,5 ஆகியவற்றின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகுதியையும் அனுபவத்தையும் பொறுத்து பேசித் தீர்க்கப்படலாம்.

7) வடக்கு கிழக்கு மாகாணத்தின் எந்தப்பகுதியிலும் பணிபுரியக்கூடியவாறான சிறந்த ஆரோக்கியத்தையும், உடல்நிலையையும் விண்ணப்பதாரிகள் கொண்டிருக்கவேண்டும்.

8) **விண்ணப்பிக்கவேண்டிய முறை:-** கல்வித்தகைமை, தொழில்சார் தகைமை, பிறந்த திகதி, முன்னர் ஆற்றிய பணியின் விபரம், கடந்த கால அனுபவம் முதலியன அடங்கலாக விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்படி விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின் றனர். திட்டப்பணிப்பாளர், திட்ட முகாமைத்துவப் பிரிவு, வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாணத்திட்டம் (நெகரப்) வடக்கு கிழக்கு மாகாணசபை செயலகம் உள்துறைமுக வீதி,திருகோணமலை என்னும் முகவரிக்கு **2005 மார்ச்28** அன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கும்வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும். பதிவுத் தாபாலுறை யின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்பட் டிருக்கவேண்டும் ஏற்கனவே பொதுச்சேவையில் பணிபுரியும் விண்ணப் பதாரிகள் தமது பிரிவுகளின் பொறுப்பானவர்களூடாக தமது விண்ணப் பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

### 01.சமூக அபிவிருத்தி நிபுணர் (1)

#### கடமைகளும் பொறுப்புக்களும்

இப்பதவி வகிப்பவர் சமூக தாக்க மதிப்பீடு, சமூக பாதுகாப்புஇடர், நிறுவனரீதியான அபி விருத்தி, மனித இயல்பு மேம்பாடு, சமூக முன்னெடுப்பு அபிவிருத்தி ஆகியவற்றுக்குப் பொறுப்பாவார்.

#### விசேட முதன்மைப் பணிகள் பின்வருமாறு

1) மாகாண, மாவட்ட மற்றும் கிராமிய மட்டங்களில் ஒன்று சேர்ந்த சமூக பொருளாதார திட்ட வரைபுகளை தயாரித்தல், அத்துடன் தற்போது செயற்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் தயாரிக்கப்பட்ட கிராமிய சமூகத்திட்ட வரைபுகளை புதுப்பித்தலுடன், இந்தத் திட்டங்களின் பிரதம பங்காளர்களினால் மேற்கொள்ளப்படும் திட்டமிடல், அமுலாக் கல் மற்றும் கண்காணித்தல் போன்ற செயற்பாடுகளில் மேற்கூறிய நடைமுறைகளுக் கான திருத்தங்களுக்காக சிபார்சு செய்தல் .எதிர்பார்க்கும் பெறுமதிகளை மதிப்பீடு செய்தலுடன் ஏதேனும் மாற்றங்கள் தேவைப்படின் அதற்கான சிபார்சு செய்தல்.

2) திட்ட தலையீட்டினால் பல்வேறு உபகுழுக்களுக்கு அல்லது பயனாளிகளுக்கு நிகழவுள்ள நேர்மறையான அல்லது எதிர்மறையான சமூகத் தாக்கங்களை இனங்காணல், தாக்கங்களை மதிப்பீடு செய்து முன்னுரிமை வழங்குவதுடன் எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதற்குப்பின்பற்றக் கூடிய வழிமுறைகளை முன்வைத்தல்.

3) காணி மற்றும் ஆதன உரிமைகள் பற்றிய பிரச்சினைகளை இனங்கண்டு எதிர்மறையான தாக்கங்களைக் குறைக்கும் வழிகளைச் சிபார்சு செய்தல்.

4) காணி சொத்துரிமையில் உள்ள பிரச்சினைகளை இனங்காணவும், எதிர்மறையான தாக்கங்களை குறைப்பதற்கான சிபார்சுகளைச் செய்தல்.

5) திட்டம் எதிர்நோக்கும் உள்ளக வெளியக பிரதான சமூக இடர்களை ஆராய்ந்து அறிந்துகொள்ளுதலும், சமூகப்பாதுகாப்பு மற்றும் இடர்களை முகாமை செய்யும் நடவடிக்கைகளை மீளாய்வு செய்தல்.

6) திட்டஅமுலாக்கத்தின்போது மேற்கொள்ளப்படவேண்டிய சமூக தாக்க மதிப்பீடுகளை மேற்பார்வை செய்தல்.

7) கிடைக்கக் கூடிய வழிகாட்டல்களுடன் இணங்கிப்போகுமாறு திட்டத்தில் நிகழக்கூடிய சமூகப்பாதுகாப்பு மற்றும் இடர்களை கண்காணிப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள் ளல்.

#### தகைமைகளும் அனுபவங்களும்

1) சமூகவியல்/மானிடவியலை ஒரு பாடமாகக் கொண்ட பல்கலைக்கழகப்பட்டம் அல்லது சமூகவியல்/ மானிடவியலை ஒரு பாடமாகக் கொண்ட அபிவிருத்திப் பொருளாதாரத்துறையில் பல்கலைக்கழகப்பட்டம்

அத்துடன்

2) சமூக விஞ்ஞானத்தில் பட்டப்பின் படிப்பு அல்லது பட்டப்பின் டிப்பிளோமா நெறியைப் பர்த்தி செய்திருத்தல். அத்துடன் கிராம அபிவிருத்தியில் நிபுணத்துவ அனுபவமும், எல்லைநிலையிலான நலிவுற்ற உபகுழுவுடன் பணியாற்றிய சமூக மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்,சமூக திட்ட வரைபுகள், நிறுவன பகுப்பாய்வு மற்றும் ஒழுங்கமைந்த அபிவிருத்தியில் பணியாற்றிய குறைந்த பட்சம் பத்துவருட கால அனுபவமும் கொண்டிருத்தல்.

### 02.சுற்றாடல் நிபுணர் முழுநேரம் (01)

#### கடமைகளும் பொறுப்புக்களும்

***இப்பதவி வகிப்பவர் விசேட, கடமைகளையும்,பொறுப்புக்களையும் நிறைவேற்ற வேண்டும்.***

1) கட்டடம் அமையவுள்ள பகுதியின் சுற்றாடலை மதிப்பீடு செய்து ,சுற்றாடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு இலகுபடுத்தும் நடவடிக்கைகளை தயார்படுத்தல்.

2) நிர்மாணம் மேற்கொள்ளப்படவுள்ள பகுதிகளுக்கு சுற்றாடல் தாக்க மதிப்பீடு தயார்செய்தல்.

3) (A) வீடுகள் நிர்மாணிப்பதற்கு தேவையான மூலப்பொருட்களைத் திரட்டுதல்.

(B) திண்மக்கழிவு முகாமைத்துவம் செய்தல்.

(C) கழிவு நீர் முகாமைத்துவம்செய்தல்.

(D) உரிய சுகாதார வசதிகள் வழங்குதல் போன்ற திட்டத்தை அமுல்படுத்தும் பல்வேறு கட்டங்களின் போது சிறந்த சுற்றாடல் நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதிசெய்தல்.

4) திட்ட அமுலாக்கத்தின் போது பொருத்தமான சுட்டிகளைத் தயாரிப்பதுடன் தகுந்த கண்காணித்தல் நடைமுறைகளை அமுல்படுத்தல்.

5) சுற்றாடல் சேதாரங்களை முன்னரே கண்டறியக்கூடிய விதத்தில் ஒழுங்குகள் மேற்கொள்ளல்.

6) சுற்றாடல்பாதுகாப்பு கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ள தனை உறுதி செய்தல்.

7) வீடமைப்பு நிர்மாணத்துடன் தொடர்புடையதான சுற்றாடல் கண்காணிப்பு மற்றும் சுற்றாடல் தரக்கட்டுப்பாடு ஆகியவற்றைச் செயற்படுத்துவதிலும், அமுல்படுத்து வதிலும்ப ங்குதாரர்களுக்கு உதவி செய்தல்.

#### கல்வித் தகைமைகளும், அனுபவமும்

1) விஞ்ஞானம் அல்லது சிவில்/சுற்றாடல்,பொறியியல் பட்டதாரி, சுற்றாடல் செயல்திட் டங்களில் குறைந்தது எட்டு வருடங்கள் பணியாற்றிய அனுபவம் கொண்டிருத்தல்.

அத்துடன்.

2) சுற்றாடல் துறையில் பட்டப்பின் படிப்பு அல்லது பட்டப்பின் டிப்ளோமா நெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

### 03. பிரதித்திட்டப்பணிப்பாளர் பதவி (முழுநேரம்) 09.

#### கடமைகளும் பொறுப்புகளும்

1) மாவட்டத்திட்டப்பிரிவினையும்,திட்ட அலுவலர்களின் செயற்றிறன் மதிப்பீடு, நடவடிக்கைகளை மேற்பார்வையிடல்,ஒருங்கிணைத்தல் ஆகியவற்றையும் செயற்றிறனுடன் முகாமைத்துவம் செய்தல் .

2) திட்டமிடல் ,நடைமுறைப்படுத்துதல் தொடர்பான முறைமைகளையும், நடைமுறை களையும் வகுப்பதுடன் வினைத்திறனுடன் ஒழுங்கமைத்தல் திட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், கண்காணித்தல்,நடைமுறைப்படுத்தல்.

3) திட்ட நடைமுறை படுத்துகையின் போது எழும் பிரச்சினைகளை இனங்காணல், அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4) திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் வெளிநாட்டு நிதியிட்ட முகவர்களுடனும், ஏனைய பங்காளர்களுடனும் சுமூகமான தொடர்பினை உருவாக்குதலும் பேணுதலும்.

5) திட்டப்பணிப்பாளரின் கோரிக்கைக்கு ஏற்றவகையிலே அறிக்கைகளையும், ஏனைய விபரங்களையும் தயாரித்தல்.

#### கல்வித்தகைமையும், அனுபவமும்

1) பொறியியல்,விஞ்ஞானம்,சட்டம்,பொருளியல்,வர்த்தகவியல்,விவசாயம்,வணிக முகாமைத்துவம்/முகாமைத்துவம்/கணக்கியல் அல்லது வேறேதும் பொருத்தமான துறைகளில் இளமாணிப்பட்டம். அத்துடன் வெளிநாட்டு முகவர்களினால் நிதியீட்டம் செய்யப் படும் அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் 12 வருடகால அனுபவம் இதில் எட்டுவருடங்கள் சிரேஷ்ட முகாமையாளராக இருத்தல்.

அல்லது

2) தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமானி/டிப்ளோமா)அல்லது குறித்த துறையில் அங்கிகரிக்கப்பட்ட தொழில்சார்நிறுவனம் ஒன்றின் கூட்டிணைப்பு அங்கத்துவம்.

அத்துடன்.

அத்துறையில்எட்டுவருட அனுபவம் கொண்டிருத்தல் இதில் வெளிநாட்டு முகவர்களினால் நிதியீட்டம் செய்யப்படும். அபிவிருத்தித்திட்ட நடைமுறைப்படுத்த லில் ஐந்து வருட அனுபவத்தைத் கொண்டிருத்தல்.

#### தொழில்சார் தகைமை

1) சிக்கலானதும் பல்வேறு செயற்பாடுகள் கொண்டதுமான திட்டங்களைத் திட்டமிடலும்,நடைமுறைப்படுத்தும் ஆற்றல்.

2) திட்டத்தின் நீண்டகால நிறைவேறுடைமையை உறுதிப்படுத்தும் வகையிலே பங்காளர் களின் பங்களிப்பை ஊக்குவித்தல் , மற்றும் திறமைசார் நடைமுறைப்படுத்தும் ஆற்றல்.

3) பல்வகை முகாமைத்துவம் கொண்ட குழுவினை ஆற்றலுடன் ஒழுங்கமைத்தல், அதற்குத் தலைமை தாங்குதல்.

4) திட்டத்தரவுகளை ஆராயும் ஆற்றலும், திட்ட நடைமுறைப்படுத்தலின் போது உருவாகும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் திறனும்.

## 04. சிவில் பொறியியலாளர் (8) (முழுநேரம்).

### கடமைகளும் பொறுப்புக்களும்

இப்பதவிவகிப்பவர்சிறப்புத் தேர்ச்சி தேவைப்படுமிடத்து தேவையான தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குவதுடன், திட்ட அமுலாக்கல் வரைபிலும், கடன்/நன்கொடை உடன்படிக்கையிலும் விபரப்படுத்தப்பட்டுள்ளதன்படி திட்டத்தயாரிப்பு, திட்ட அமுலாக்கம் போன்ற சகல விடயங்களையும் கையாளவேண்டும்.

1) புனரமைப்பு திட்டங்களுக்கென்று சிபார்சு செய்யப்பட்ட அல்லது அத்திட்டங்களில் பயன்படுத்தப்பட்ட பல்வேறு வகைப்பட்ட குறைந்த செலவுடைய வீடமைப்புத் திட்டங்கள்சார்ந்த தகவல்கள் சேகரித்தல்.

2) திட்டப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வீடுகள் புனர் நிர்மாணத்திற்கு பொருத்தமான வீடமைப்பு வகைகளை திட்டமிட்டு வடிவமைத்தல்.

3) வேலைத்தளத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழில்நுட்ப அலுவலர்களுக்கு உதவிவழங்கி மேற்பார்வை செய்தல்.

4) நிர்மாணத்தின் அளவு எவ்வளவு முன்னேற்றமடைகிறது என்பதை கண்காணித்தல்.

5) திட்டஅமுலாக்கத்தின் போது எழும் பிரச்சினைகளை உடனடியாக இனங்கண்டு அவற்றுக்கு உடனடித்தீர்வு காணுதல்.

6) திட்டத்துக்கான கொள்வனவுகளை மேற்கொள்வதில் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்துக்கும் அரசாங்கத்தின் வழிமுறைகளுக்கும் இணங்கிப்போகக்கூடியவாறு திட்டப் பணிப்பாளருக்கு உதவி செய்தல்

### தகைமைகளும் அனுபவங்களும்

1) பொறியியலில் இளமானிப்பட்டம் **அல்லது**

2) பொதுநிர்வாக அமைச்சின் பொறியியல் சேவைகள்சபையினால் சமமானது என ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறெதும் தொழில்நுட்பத் தகைமையுடன் குறைந்த செலவிலான வீடுகளை நிர்மாணித்தல், வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் கீழ் செயற்படும் அபிவிருத்தித் திட்டத்தில் சேவையாற்றிய இரண்டு வருட கால அனுபவம்

**அல்லது.**

3) இலங்கை தொழில்நுட்பசேவையுடன் அரச/மாகாணசபை அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் 10 வருட கால அனுபவம்

## 05. காணி நிர்ணய உத்தியோகத்தர் (முழுநேரம்) 01

### கல்வித் தகைமைகளும், அனுபவமும்

1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இளமானிப்பட்டம் பெற்று, காணி விடயம், காணி உரிமம், கிராமக் குடியேற்றம் சம்பந்தமாக காணி உரிமம் பாராதீனப்படுத்தல், கிராமக் குடியேற்றம், காணிப்பிணக்குகளைத் தீர்த்து வைத்தலில் ஐந்து வருட அனுபவத் துடன் போதிய அறிவிருத்தல், **அல்லது**.

2) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் விவசாயத்தில் அல்லது Real Estate இல் டிப்ளோமா நெறியைப் பூர்த்திசெய்திருத்தல் அல்லது அரச /தனியார்துறையில் அரச காணிகள், தனியார் காணிக் குடியேற்றம் சம்பந்தமாக ஆகக்குறைந்த 15 வருட அனுபவம் பெற்றிருத்தல் புதிய கிராமியக் குடியேற்றத்திட்டங்கள் அமைத்தலிலும், குடியேற்றத் திட்டங்களுக்கான அபிவிருத்தித்திட்டம் அமைத்தலிலும் பரந்த அனுபவம் பெற்றிருத்தல்வேண்டும்.

**அல்லது**

3) ஐந்து வருட சேவையைப்பர்த்திசெய்த பதிவாளர்நாயகத்திணைக்களப் பதிவாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்

4) வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல்

5) நாட்டின் காணிச் சட்டங்கள், நடைமுறையிலுள்ள சட்டங்களில் தேர்ச்சிபெற்றிருத்தல்

## 06. கணக்காளர் பதவி முழுநேரம் (08)

பதவியிலமர்த்தப்படும் உத்தியோகத்தர் கணக்கியல் முறைமை, உள்ளகக் கட்டுப்பாடு, வரவு செலவு திட்டமிடல் , நிதி அறிக்கையிடல் உள்ளிட்ட நிதி முகாமைத்துவ முறைமைகளை உருவாக்குவதுடன் அவற்றுக்குப் பொறுப்பானவராகவும், கணக்காய்வு விடயங்களில் ஆற்றலுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். விசேடமாக அவர் .

1) திட்டத்தின்பால் உள்ள வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கேற்ற வகையில் திறமையான நிதி நடவடிக்கைகளையும் முறைமைகளையும் உருவாக்குதல்.

2) திட்டநடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதற்கும் கண்காணிப்புச் செய்தவதற்கு மேற்ற வகையிலே சரியானதும் பூரணமானதும் உரிய நேரத்தில் கிடைக்கக் கூடிய நிதித்தகவல்களை வழங்கக் கூடியவராகவும் இருத்தல்.

3) திட்டத்தின் வருடாந்த வரவு செலவு மதிப்பீடு, கொள்வனவும் திட்டவரைபு ஆகியவற்றைத் தயாரித்தல்.

4) கணக்குப்பொறுப்பீட்டினை உறுதிப்படுத்தல், அரசாங்கத்தினதும் வெளிநாட்டு நிதிநிறுவனங்களின் நடைமுறைகளுக்கு ஏற்றவகையிலும் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதிவளத்தை வினைத்திறனுடன் பயன்படுத்தல்.

5) திட்டச் செலவினங்களுக்காக கடனாகப் பெற்ற நிதியினை உரிய நேரத்தில் மீளப்பெறல், செலுத்துதல், மீளக்கொடுத்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்தல்.

6) மாதாந்த, காலாண்டு, வருடாந்த நிதிக்கூற்றுக்களை உரிய நேரத்தில் தயாரித்தல், கணக்காய்வுத் தேவைகளுடன் இணங்குதல்.:

7) கடன்பெறு திட்டங்களின் மீளச்செலுத்துதல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரச முகவர் நிறுவனங்களுடன் நெருங்கிய உறவினை உருவாக்குதல்.

### கல்வித்தகைமையும் அனுபவமும்

1) கணக்காளர் சேவையின் முதலாம் தர உத்தியோகத்தர் வெளிநாட்டு நிதியிடல் திட்டங்களில் நிதி முகாமைத்துவத்தில் 10 வருட அனுபவம் இருப்பது விரும்பத்தக்கது. அல்லது.

2) நிதி அல்லது முகாமை நிதியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றில் இணை அங்கத்துவம் (CIMA/ ACCA/ICASL) அத்துடன் வெளிநாட்டு நிதியீட்டு அபிவிருத்தித்திட்டத்தில் குறைந்தது 5 வருடகால அனுபவம் **அல்லது**.

3) அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் அமைப்பு ஒன்றினால் நடத்தப்பட்ட இடைநிலைத்தரத்திலான தொழில்சார் பரீட்சையில் சித்தியும் வெளிநாட்டு நிதியீட்டத்திட்டமொன்றில் 15 வருட அனுபவமும்

4) கேள்வி முன்மொழிவுக்கான மதிப்பீடு செய்யக்கூடிய வகையிலான பகுப்பாய்வுத் திறன்

5) நல்ல தொடர்பாடலும் (எழுத்து/பேச்சு) அலுவலர்களிடையே உறவுகளைப் பேணலும்.

6) பொருள் சேவைகள் கொள்ளல் தொடர்பில் வளம்பொருந்தியதும் கடும் உழைப்பும் நிலையான தன்மையுடன் கூடியதுமான அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஆற்றல்.

7) கணினித்துறைசார் அறிவு

8) ஆங்கில மொழியில் எழுதுவதிலும் பேசுவதிலும் அதிஉயர்ந்த வினைத்திறன்.

## 07.திட்ட உதவி அலுவலர்கள்

### உதவிக் கணக்காளர் பதவி (01) (முழுநேரம்)

### கல்வித் தகைமையும் அனுபவமும்

1) க.பொ.த (உ/த) பரீட்சையில் எல்லாப்பாடங்களிலும் சித்தி (மூன்று அல்லது நான்கு பாடங்கள் எது பொருத்தமானதோ)அத்துடன்.

2) க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறுபாடங்களில் சித்தி. ஆங்கிலம் உட்பட கணிதம், மொழி/ இலக்கியம் ஆகியவற்றுடன் வேறு 02 பாடங்களில் சித்தி அத்துடன்.

3) அங்கீகரிக்கப்பட்ட கணக்கீடு நிறுவனம் ஒன்றில் தொழில்சார் பரீட்சையில் பகுதித் தகைமை.

4) தனியார் அல்லது பொது நிறுவனம் ஒன்றில் (வங்கிச் சூழல் விரும்பத்தக்கது) ஒருவருடகால அனுபவம்.

5) கணினி மென்பொருள் அல்லது அதுபோன்ற சந்தையிலுள்ள மென்பொருள் முறைமை ஒன்றினைக் கையாளக்கூடிய சிறந்த அறிவு.

## 08. திட்டச் செயலாளர் பதவி (01) (முழுநேரம்)

பதவியிலமர்த்தப்படும் உத்தியோகத்தர் அலுவலக நடைமுறை தொடர்பான நடவடிக்கைகளுக்கு உதவுவதுடன் திட்டப்பணிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோருக்கு உதவுவதும் திட்ட அலுவலகம் செயற்திறனுடன் இயக்க உதவுதல்.

### கல்வித் தகைமையும், அனுபவமும்.

1) க.பொ.த. (உ/த) இல் எல்லாப் பாடங்களிலும் (மூன்று அல்லது நான்கு பாடம் எது பொருத்தமானதோ) சித்தி, அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் அலுவலகச் செயற்பாடு தொடர்பான கருத்துரை அல்லது 5 வருட அனுபவத்துடன் சார்ட்டட் செயலாளர் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துதல் அல்லது.

2) சார்ட்டட் செயலாளராக இருத்தல்

### தொழில்சார் திறன்

1) ஆங்கிலத்திலும், கணனித்துறையிலும் அதிசிறந்த ஆற்றல்

2) சிறந்த தொடர்பாடல் திறன் (எழுத்து/பேச்சு) அத்துடன் சுயேச்சையாக கடிதத் தொடர்பை ஏற்படுத்தும் திறன்.

3) அலுவலக முறைமைகளை கோப்பிடுதல், கடிதத்தொடர்பு, அலுவலக ஊழியர்கள் நிலைப்பாடு அலுவலக நடைமுறைகளை உருவாக்குதலும், பராமரித்தலும்.

4) கணினி இதர அலுவலகக் கருவிகள் தொடர்பான ஒப்பந்த நடவடிக்கைகளைப் பேணலும் அவற்றைப் பராமரித்தலும்.

5) குழுவாகச் செயற்படும் சூழலிலே ஏனைய குழு உறுப்பினர் மத்தியில் நம்பிக்கை, ஒத்துழைப்பு, சிறந்த பொதுமக்கள் தொடர்பினை ஊக்குவிக் கும் ஆற்றல்.

6) வேலைப்பளுவின் மத்தியில் தொழிற்பட்டு காலக்கெடு எல்லையுடன் செயற்படு திறன்.

7) கணனித்துறையிலும், சுருக்கெழுத்திலும் ஆற்றல்.

## 09. சமூகசேவை உத்தியோகத்தர் (08)(முழுநேரம்)

### கல்வித்தகைமையும், அனுபவமும்

1) சமூக விஞ்ஞானம், விஞ்ஞானம், சட்டம், பொருளியல், வர்த்தகவியல், விவசாயமும், தொழில்நிர்வாகம்/முகாமைத்துவம், கணக்கியல் ஆகிய துறைகளில் ஒன்றில் இளமானிப்பட்டமும் அரச/அரசசார்பற்ற நிறுவனங்களில் சமூக அபிவிருத்தித் துறையில் குறைந்தது 03 வருட அனுபவம்.

2) ஆங்கில மொழியில் சிறந்த ஆற்றலும் கணினியில் தொழிலாற்றும் அறிவும்.

## 10. அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி (02) (முழுநேரம்)

### கல்வித்தகைமையும், அனுபவமும்.

1) அபிவிருத்திக்கல்வி, பொருளியல், சமூகவிஞ்ஞானம், முகாமைத்துவம், அரசஅறிவியல் அல்லது புவியியல் பாடத்தில் இளமானிப்பட்டம்.

2) பொதுத்துறை அல்லது தனியார் துறையில் அபிவிருத்தித் திட்டமிடல் நடைமுறைப்படுத்தலில் குறைந்தது 7 வருட கால சேவை அனுபவம்.

3) கணினித்துறையில் சிறந்த ஆற்றல்.

## 11. நிர்வாக உத்தியோகத்தர் (01) (முழுநேரம்)

### கல்வித்தகைமையும், அனுபவமும்

1) பொது எழுதுநர் சேவையில் அதிசிறப்புத்தரத்துடன் அத் தரத்தில் குறைந்தது 08 வருட அனுபவம் அல்லது

2) பொது எழுதுநர் சேவை வகுப்பு 1இல் அத் தரத்தில் 15 வருடகால அனுபவம் அத்துடன்

3) அரச நிறுவனம் ஒன்றில் தாபன வேலைகளில் குறைந்தது 03 வருட அனுபவம் அல்லது.

4) க.பொ.த. (சா/த) இல் இரண்டு தடவைகளில் மேற்படாது 6 பாடங்களில் சித்தி, இவற்றில் கணிதம், ஆங்கிலம், மொழி/இலக்கியம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச்சித்தியும், வேறும் இரண்டு பாடங்களில் சித்தி.

5) ஆங்கில மொழியில் ஆற்றலும், கணினியில் பணிசெய்யும் ஆற்றலும்.

## 12. பிரமத எழுதுவினைஞர் பதவி(01) (முழுநேரம்)

### கல்வித்தகைமையும், அனுபவமும்.

1) பொது எழுதுவினைஞர் சேவை வகுப்பு 1இல் 15 வருட அனுபவம் அல்லது

2) க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி. இவற்றில் ஆங்கிலத்துடன் கணிதம், மொழி/ இலக்கியம் உட்படவேறு இரண்டு பாடங்களில் திறமைச்சித்தி

3) ஆங்கில மொழியில் சிறந்த ஆற்றலும், கணனியில் பணிசெய்யும் ஆற்றலும்.

## 13.தரவு பதியுனர்/தட்டெழுத்தாளர்/எழுதுவினைஞர் (06) (முழுநேரம்)

### கல்வித்தகைமையும், அனுபவமும்

1) க.பொ.த(உ/த) பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் (மூன்று அல்லது நான்கு பாடங்களில் எது பொருத்தமானதோ) சித்தி.

2) க.பொ.த(சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்குமேற்படாது 6 பாடங்களில் சித்தி. இவற்றில் கணிதம், ஆங்கிலம், மொழி/இலக்கியம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச்சித்தி தரவு பதியுனர் பதவிக்கு கணினி தொழிலில் மூன்றுவருட அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன்

3) பல்கலைக்கழகத்தில் அல்லது வேறேதும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணினியில் பின்வரும் துறைசார் கற்கை நெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்தவராக இருத்தல்.

- எம்.எஸ்.ஆபீஸ்
- பவர்பொயின்ற்
- டேற்றாபேஸ் மனேஜ்மன்ற்
- வெப் டிசைனிங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிரிக்கெட் துளிகள்...

*. மொகாலி டெஸ்டில் பாகிஸ்தான் இரண்டாவது இனிங்சில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 496 ஓட்டம் குவித்து டிக்ளேர் செய்தது. இது அந்தஅணி இந்திய மண்ணில் எடுத்த அதிக பட்ச ஓட்டமாகும். இதற்கு முன்பு 1986-87ஆம் ஆண்டில் சென்னையில் நடந்த டெஸ்டில ஒன்பது விக்கெட் இழப்பிற்கு 487 ஓட்டம் எடுத்திருந்தது.

*. இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டின் இரண்டாவது இனிங்சில் பாகிஸ்தான் வீரர்கள் அப்துல் ரசாக்- கம்ரான் அக்மல் இணை ஏழாவது விக்கெட்டுக்கு 184 ஓட்டம் குவிததது புதிய சாதனையாகும். இதற்கு முன்பு ஏழாவது விக்கெட்டுக்கு 1986-87ஆம் ஆண்டில் அகமதாபாத்தில் நடந்த டெஸ்ட்டில் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் வீரர்கள் இம்ரான்கான்-இஜா அகமட் 154 ஓட்டம் எடுத்ததே அதிக பட்சமாகும்.

# வோர்ன், கிளெஸ்பி அபார பந்து வீச்சு அவுஸ்திரேலியாவுக்கு 9 விக்கெட் வெற்றி





நியூசிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் கிறிஸ்ட் சார்ச்சில் நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட போட்டியில் அவுஸ்திரேலிய அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் நான்காம் நாளான நேற்று விக்கெட் இழப்பின்றி ஒன்பது ஓட்டங்களுடன் ஆட்டத்தைத் தொடர்ந்த நியூசிலாந்து அவுஸ்திரேலிய பந்து வீச்சைச் சமாளிக்க முடியாது வெறும் 131 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

மக்கலம் அதிக பட்சமாக 24 ஓட்டங்களைப் பெற்றார். ஷேன் வோர்ன், கிளெஸ்பி அபாரமாகப் பந்து வீசி நியூசிலாந்து வீரர்களை திணறடித்தனர். வோர்ன் ஐந்து விக்கெட்டுக்களையும் கிளெஸ்பி மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். 133 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்திரேலியா 31.3 ஓவரில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காது லாங்கர் 72 ஓட்டங்களையும், பொண்டிங் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

இருஅணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி வரும் 18ஆம் திகதி வெலிங்டனில் தொடங்குகின்றது.

# கரைச்சிப் பிரதேச கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் இன்று ஆரம்பம்

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

கிளி. பொது விளையாட்டு மைதானம், கிளி. உதயதாரகை விளையாட்டு மைதானம், இளந்தென்றல் விளையாட்டுக்கழகம், அம்பாள்குளம் ஆகிய மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இன்றும் நாளையும் இருபாலருக்குமான எல்லே போட்டி காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாக கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் சிவநேசன் அறிவித்துள்ளார்.

இதேவேளை நாளை மறுதினம் கரப்பந்தாட்டப் போட்டியும், 17ஆம், 18ஆம் திகதிகளில் கால்பந்தாட்டப் போட்டியும் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி தோற்கடித்தது

தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரிக்கும், கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற வீரர்களின் போர் துடுப்பாட்டப் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வெற்றிபெற்றுள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக இடம்பெற்ற போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளன. ஐந்தாவது ஆண்டாக தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக்கல்லூரி 130 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இரண்டாவது இனிங்சில் 147 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் தர்சன் 37 ஓட்டங்களையும், மயூரன் 22 ஓட்டங்களையும் ஜெயபிரிந்தன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். இரண்டாவது இனிங்சில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த ஜெயகிருஷ்ணா 10 ஓவர்களில் ஒரு ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றத்துடன் 28 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், பாலகிருஷ்ணா 7 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 6 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

ஸ்கந்தவரோதயாக்கல்லூரி முதல் இனிங்சில் 174 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தனர். இதில் நிஷாகரன் 49 ஓட்டங்களையும், சுஜீபன் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

இரண்டாவது இனிங்சில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 4 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்று தனது வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் ரஜீவன் 43 ஓட்டங்களையும், நிஷாகரன் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். முதல் இனிங்சில் மாகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த புலனேசன் 11.5 ஓவர்களில் 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 53 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் திலீபன் 15 ஓட்டங்களில் 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 44 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைச் சேர்ந்த வீரர்களான நிஷாகரன் ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், சிறந்த களத்தடுப்பாளராக வி.ரஜீவனும் சிறந்த பந்துவீச்சாளராக ஜெயகிருஷ்ணாவும் தெரிவு செய்யப்பட்டனர். மகாஜனாக்கல்லூரியின் வீரன் ரி.மயூரன் சகலதுறை வீரனாகத் தெரிவுசெய்யப்பட்டார். (41)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் தோல்வியை நோக்கி சிம்பாப்வே அணி



தென்னாபிரிக்க-சிம்பாப்வே அணிகளுக்கிடையில் செஞ்சூரியன் பார்க்கில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா பிறின்சின் அபார துடுப்பாட்டத்தால் வலுவான நிலையை அடைந்துள்ளது.

போட்டியின் மூன்றாம் நாளில் 109.5 ஓவர்கள் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா ஏழு விக்கெட்டுக்களை இழந்து 480 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் பிறின்ஸ் ஆட்டமிழக்காது 139 ஓட்டங்களையும், போயே 82 ஓட்டங்களையும், கலிஸ் 58 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கிறேமர் மூன்று விக்கெட்டுக்களையும், ஹீத்ஸ்ரிக் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடும் சிம்பாப்வே மூன்றாம் நாளில் 53.2 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்று இக்கட்டான நிலையில் இருந்தது.

# இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் அக்தர் பங்கேற்பதில் சந்தேகம்

இந்தியாவுடன் நடைபெறும் ஒரு நாள் போட்டியிலும் பாகிஸ்தான் பந்து வீச்சாளர் அக்தர் பங்கேற்க மாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச கிரிக்கெட்டின் அதிவேகப் பந்துவீச்சாளர் என்ற சாதனை செய்துள்ள பாகிஸ்தான் வீரர் அக்தர் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இடம்பிடிக்கவில்லை. தோள் பட்டை காயம் காரணமாக அவதிப்பட்டுவரும் அக்தர் அணியில் இருந்து விலகினார். தற்போது ஓய்வு எடுத்து வரும் அக்தர் இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டியின் போது பாகிஸ்தான் அணியில் இடம்பிடிப்பார் என்று கூறப்பட்டது. ஆனால் இதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு என்று அக்தர் நேற்று முன்தினம் நிருபர்களிடம் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், "என்னுடைய காயம் இன்னும் சரியாகவில்லை. மருத்துவர் மேலும் நான்கு வாரம் ஓய்வு எடுக்கும்படி கூறியிருக்கிறார். இதன் பின்னர்தான் என்னால் பயிற்சிக் களத்தில் இறங்கமுடியும். எனவே இந்தியத் தொடரில் ஆடும் நம்பிக்கை இல்லை" என்றார். ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை அக்தர் ஒரு நாள் போட்டியில் ஆடுவதாகக் கூறி வருகிறது.






போர்ச்சுகலில் நடந்த பெண்களுக்கான அல்கர்வ் கோப்பைக் கால்பந்துப் போட்டியில் சுவீடன் 2-0 என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தியது. இதில் சீனாவின் ஜோஜியோ ஜியாவிடமிருந்து பந்தைத் தட்டிச் செல்லத்தான் இப்படிப் பறந்து வருகிறார் சுவீடனின் கரோலினாசெகர் (வலது)

# மேற்கிந்திய வீரர்கள் தொடர்பான விவகாரம்

## பிரதமரின் யோசனையும் நிராகரிப்பு




மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் வீரர்களின் விளம்பர ஒப்பந்தம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாக அந்நாட்டுப்பிரதமர் முன்வைத்துள்ள யோசனைகளை டிஜிசல் நிறுவனம் ஏற்க மறுத்துள்ளது. அவர்களின் யோசனைப்படி தாம் முதலீடு செய்துள்ள 11 மில்லியன் ஸ்ரெலிங் பவுண் தொகை தமக்குக் கிடைக்காது விடும் என்று நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்கிந்தியத்தீவு வீரர்கள் டிஜிசல் நிறுவனத்துடன் ஏற்கனவே ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளனர். ஆயினும் தற்போது அவர்கள் புதிதாக கேபிள் அன் வயர்லஸ் வியாபார நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளனர். பிரதமர் இரு ஒப்பந்தங்களும் ஒரே தடவை நடைமுறையிலிருக்கலாம் எனத் தெரிவித்த கருத்தையே டிஜிசல் நிறுவனம் நிராகரித்துள்ளது.

இந்தக் குழப்ப நிலையால் அந்நாட்டுடன் நடைபெறவுள்ள தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டிகளில் பங்கு கொள்ளும் தகுதியை மேற்படி மேற்கிந்தியத்தீவு வீரர்கள் ஏழு பேரும் இழப்பதாக கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

பிரதமர் தனது யோசனைகளில் எவ்வாறான விளம்பரங்களில் அவர்களின் புகைப்படம் காணப்பட வேண்டும். எவ்வாறான உடை அணிந்து அவர்கள் ஆட வேண்டும் என்பது பற்றித் தெரிவித்துள்ளார். அவை கேபிள் அன்வயர்லஸ் அணி இவர்களுடன் தொடர்பு வைப்பதையும் தடுக்கிறது. ஆனால் சில விடயங்களை கேபிள் நிறுவனம் ஏற்றுக் கொள்வதாகவும், ரசிகர்கள் வீரர்களைக் கவர வேண்டும் எனவும் பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ளது.

# அந்த இளைஞர்களின் பங்களிப்பில் சற்று ஆறுதலடைகிறேன்–இன்சமாம்

நேற்று முன்தினம் முடிவடைந்த மொகாலி கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியாவின் வெற்றிக் கனவை சிதறடித்து 184 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற பாகிஸ்தான் வீரர்களான அப்துல்



ரசாக்கையும், கமரன் அக்மலையும் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் பாராட்டியுள்ளார். இந்த இளைஞர்களின் திறமையின் பின் தாம் சற்று ஆறுதலடைந்ததாகத்தெரிவித்த அவர், அவர்கள் தமது திறனையும், பிடிவாதத்தையும் வெளிப்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் அணிக்குச் செய்த பணியை நன்கு உணர்ந்து விட்டதாகவும், இது தொடர்ந்தால தமது அணி தொடரைக் கைப்பற்றும் என்றும் கூறினார்.



கமரன் அக்மல் தெரிவிக்கும் போது போட்டிகளில் சதமடிக்கவும் பாகிஸ்தானை தோல்வியிலிருந்து மீட்பதுமே தனது கனவாக இருந்ததாகக் கூறினார். அத்துடன் இந்த இக்கட்டான சமயத்தில் சதமடித்தமை இரட்டிப்பு மகிழ்ச்சியை அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணித்தலைவர் கங்குலி கருத்துத் தெரிவிக்கும் போது, தானும் இந்த இருவரையும் பாராட்டுவதாகக் குறிப்பிட்டார். 257 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்திய நிலையில் இறுதி நாளில் வெற்றியின் விளிம்பிற்கு வந்திருந்த போட்டியை ரசாக்கும், அக்மலும் திசை திருப்பி விட்டார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

# இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

ஞானிமடம் அ.த.க பாடசாலையில் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று நடைபெறவுள்ளது. இதன் பிரதம விருந்தினராக பிரசேத செயலாளர் மா.சிறீஸ்கந்தகுமார் சிறப்பு விருந்தினராக பூநகரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

□ □ □ (34)

வட்டக்கச்சி இராமநாதபுர மகாவித்தியாலயத்தின் 2005ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் மாலை 2.00 மணியளவில் பாடசாலை மைதானத்தில் பாடசாலை முதல்வர் இ. இரட்ணகுமார் தலைமையில் இடம்பெற்றது.


முட்டி உடைத்தல், சைக்கிள் ஓட்டம், சங்கீதக் கதிரை, அஞ்ச லோட்டம், தனி ஓட்டம், வினோத உடை, சிறார்களின் விளையாட்டு என்பன இடம்பெற்றன. இதில் விவேகானந்தம் இல்லம் 874 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், பாரதி இல்லம் 752 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் நாவலர் இல்லம் 667 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (12)

கடந்த 11ஆம் திகதி கறுக்காய் தீவு இல்ல மெய் வல்லுனர் போட்டி அதிபர் கணபதிப்பிள்ளை தலைமையில் ஆரம்பமானது. தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ் ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராசா கலந்து கொண்டார்.

□ □ □

வட்டக்கச்சி இராமநாதபுரத்தில் அமைந்துள்ள அழகாபுரி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த பத்தாம் திகதி பாடசாலை மைதானத்தில் பாடசாலை முதல்வர் சி.நடராசா தலைமையில் இடம்பெற்றது. போட்டி நிறைவில் முல்லை இல்லம் 231 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் குறிஞ்சி இல்லம் 191 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (12)

## சிந்தனைக்கு



சமூகநீதி சரிவரப் பேணப்பட்டால்தான் சமுதாயம் ஒரு உன்னத நிலைக்கு வரும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 14-03-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com


## எதிர் பார்க்கலாமா?

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுப்பணிகளை மேற்கொள்வதற்கென நோர்வே அரசு சமர்ப்பித்த பொதுக் கட்டமைப்பிற்கான வரைவை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம. ஆனால் இக்கட்டமைப்பு விரைவில் ஏற்படுத்தப்பட்டாக வேண்டும் என விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன்அவர்களின் வலியுறுத்தலானது மக்களின் அவசிய தேவைகளின் அடிப்படையானதே.

ஏனெனில் சுனாமி அனர்த்தம் முடிவடைந்து 75 நாட்கள் அடைந்து விட்ட நிலையிலும், இன்னமும் மக்களின் மறுவாழ்விற்கான புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படாமல் இருப்பதற்கு இப்பொதுக் கட்டமைப்பு உருவாக்கபடாமையே காரணமாகும்.

விடுதலைப்புலிகள் இக்கட்டமைப்பு உருவாக்குவதற்குப் பல்வேறு முயற்சிகளை, விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்ட போதிலும் கூட சிறிலங்கா ஆட்சியாளர்கள் அக்கறை காட்டுவதாக இல்லை. வழமை போலவே அவர்கள் காலத்தை இழுத்தடிப்பதிலேயே அக்கறை காட்டுபவர்களாகவுள்ளனர்.

சிறிலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்து எப்பொழுதுமே காலத்தை இழுத்தடித்தல்–அதாவது பிற்போடுதல் அன்றி ஒத்தி வைத்தல் என்பது பொதுவானதொரு தந்திரோபாயமாகக் கைக்கொள்ளப்படுகின்றது. அதாவது கோரிக்கைகளை நிராகரிக்காது ஒத்தி வைப்பதன் மூலம் அதனை நிறைவேற்றாது– காலம் கடந்த நிலையில் அதனைக் கைவிடுதல் என்பதே அதன் தந்திரோபாயமாகும்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஆலோசனைகளையும், அதற்கான வரைவையும் முன்வைத்தவர்கள் விடுதலைப் புலிகளே ஆனால் இப்பொதுக்கட்டமைப்பு ஆலோசனையை நிராகரிக்க முடியாத நிலையில் இருந்த அரசாங்கம் அதற்குரிய திட்ட வரைவை நிராகரிததன் மூலம் இத் திட்டத்தை ஒத்திவைத்தது.

இந்நிலையில் இருதரப்புடனும் சந்திப்புக்களை நடாத்தியவர்களான நோர்வே ஏற்பாட்டாளர்கள் சுனாமி அனர்த்தத்தின் பாதிப்புக்களைப் புரிந்துகொண்டு பொதுக்கட்டமைப்பு வரைவு ஒன்றைத்தாமே முன்வைத்தனர். இக்கட்டமைப்பு விடுதலைப் புலிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளதாயினும் அரசாங்கத்தரப்பிலிருந்து இதுவரை பதிலேதும் கிடைக்கப்பெற்றதாக இல்லை.

நோர்வே தரப்பு இப்பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விடயத்தில் இணக்கம் ஏற்படும் என்ற நம்பிக்கையை ஏற்கனவே பலதடவை வெளிப்படுத்தியிருந்தது. இறுதியாக கடந்த மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சூல்ஹெய்மும் இந்நம்பிக்கையை வெளியிட்டிருந்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகள் முன்வைத்த பொதுக் கட்டமைப்பு வரைவு ஆயினும் சரி, நோர்வே தயாரித்துள்ள பொதுக் கட்டமைப்பு ஆயினும் சரி அவற்றின் உள்ளடக்கம் பற்றிய சரத்துக்கள் சரியான முறையில் வெளிப்படாத நிலையில் அது குறித்துக் கருத்துக் கூறுவதற்கில்லை. இருப்பினும் நோர்வே தயாரித்துள்ள பொதுக்கட்டமைப்பாயினும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுதல் அவசியமானதாகும். அப்பொழுதே அது நடைமுறைக்கு வருவது சாத்தியமானதாக இருக்கும்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கடந்த ஒரு வாரப் பேச்சானது வழமையான தொனியில் இருந்து சற்று மாற்றம் கண்டுள்ளது போல் தெரிகிறது. கடந்தவாரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட தடவை இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றியும், பொதுக் கட்டமைப்புப் பற்றியும் பேசியுள்ளதோடு எவர் எதிர்த்தாலும் தாம் அவற்றை நிறைவேற்றப்போவதாகவும், சமாதான முயற்சிகளை எதிர்ப்பவர்களைப் பைத்தியர்கள், முட்டாள்கள் எனக் கூறியுள்ளார்.

இவற்றையடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஓர் முடிவிற்கு வந்துள்ளார் போன்றதொரு தோற்றப்பாடு உருவானது போன்றே உள்ளது. ஆனால் சனாதிபதி சந்திரிகா இத்தகைய தோற்றப்பாட்டைத் திட்டமிட்டே உருவாக்குகின்றாரா? அன்றி தேவையுணர்ந்து செய்கின்றாரா? என்பது குறித்து தற்பொழுது உறுதியாக எதையும் கூற முடியாது போனாலும், தென்னிலங்கையில் உருவாகும் அரசியல் நிர்ப்பந்தம் சூழ்நிலைகளுக்கு சனாதிபதி சந்திரிகா செவி சாய்க்காது தீர்மானத்தை அமுல் படுத்துவாரா? என்பது கேள்விக்குரியதாகவே இருக்கும் என உறுதிபடக் கூற முடியும்.

இப்படியானதொரு நிர்ப்பந்தத்திற்கான செயல்களைப் பேரினவாத சக்திகள் தொடங்கி விட்டதாகவே எண்ணவைக்கின்றது. அதாவது பொதுக்கட்டமைப்பைக் குழப்பத்திற்குள்ளாக்குவதான முயற்சியில் பேரினவாத சக்திகள் முனைப்புக்காட்டத் தொடங்கியுள்ளதென்றே கூறலாம். இதன் ஓர் அங்கமே இலங்கைக்கான உலக வங்கியின் வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட்டிற்கு எதிரான கூச்சலும் ஆர்ப்பாட்டங்களுமாகும்.

# ஆறு கோரிக்கைகளை முன்வைத்து திருமலையில் இன்று வீதிமறியல்

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் ஆறு அம்சக்கோரிக்கையை முன்வைத்து இன்று மாவட்டம் தழுவிய வீதிமறியல் போராட்டத்தில் குதிக்கவுள்ளார்கள்.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையினால் இந்த முழுநாள் வீதிமறியல் போராட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை நிவாரணம் வழங்குதலில் அரசாங்கத்தினால் காட்டப்படும் இன ரீதியான பாராபட்சம் நீக்கப்பட வேண்டும், சர்வதேச நிவாரண உதவிகள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும், ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் உடனடியாக இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட வேண்டும், அவசர காலச் சட்டத்தை சாதகமாகப் பயன்படுத்தி தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்.ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இருப்பிடங்களை அமைப்பதில் காட்டப்பட்டுவரும் அசமந்தப் போக்குகளையப்பட வேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த மறியல் போராட்டம் இடம் பெறவிருக்கின்றது.

இதேவேளை ஆழிப்பேரலை நிவாரண உதவிகள் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், பாதிக்கப்பட்ட சகலருக்கும் நிவாரண உதவிகள் சென்றடைய வேண்டும். இருப்பிடங்களை இழந்துள்ள மக்களுக்கு நிரந்தரக் குடியிருப்பு வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து வடக்கு கிழக்கு சிங்கள அமைப்பின் ஏற்பாட்டில் ஆறு பௌத்த பிக்குமார்கள் நேற்று முன்தினம் மாலை முதல் திருகோணமலை மணிக்கூட்டுச் சந்தியில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

# ஜே.வி.பியுடன் சமரசம் செய்ய அமைச்சர்கள் குழு நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும், ஜே.வி.பி யினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை ஒரு முடிவிற்குக் கொண்டு வருவதற்கு ஆறு சிரேஷ்ட அமைச்சர்கள் .கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது அமைச்சர்களான. கதிகாமர், மங்கள சமரவீர, மைத்திரிபாலசிறிசேன, ரத்னசிறி விக்கிரமநாயக்க, நிமல் சிறிபால டிசில்வா சுசில்பிரேம ஜயந்த ஆகியோர் சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகில் நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவில் இடம் பெற்ற உந்துருளி, ஈருருளி விபத்தில் ஈருருளியை ஓட்டி வந்த ம.புஸ்பராணி (வயது-28) என்பவர் காயமடைந்துள்ளார். (33)

## அரச உயர் அதிகாரிகளுக்கு பாதாள உலகக் குழுவினர் கொலை மிரட்டல்

உயர்மட்ட அரச உத்தியோகத்தர்கள் பலருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இவர்களுள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் ஐ.எஸ் ஜயரட்ண மற்றும் இலஞ்ச ஊழல் ஆணையகத்தின் உறுப்பினர்கள், போக்குவரத்து ஆணையகத்தின் உறுப்பினர்கள் முதலானோரும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில பாதாள உலகக் குழுக்களாலும், சில வியாபாரிகளாலுமே இந்த அச்சுறுத்தல்கள் தமக்கு விடுக்கப்பட்டிருப்பதாகப் பொலிசாரிடம் முறையிட்டுள்ளனர். (32)

# கல்வியை தனியார் மயப்படுத்துதலை எதிர்ப்போருக்கு எதிராகச் சூழ்ச்சி

*–பல்கலை விரிவுரையாளர் கூட்டமைப்பு தெரிவிப்பு*

கல்வியினை தனியார் மயப்படுத்துவதற்கு எதிரானவர்களுக்கு எதிராக நடைபெறும் சூழ்ச்சிகளைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள அமைப்பின் தலைவர் சந்தன அபயரட்ண பல்கலைக்கழக மாணவர்கள் எப்போதும் கல்வியைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டிருந்தனர். கடந்த நாட்களில் சுதந்திரக்கல்வி தொடர்பில் இக்கட்டான சூழல் ஏற்பட்டது. அமைதியான முறையில் எதிர்ப்பு தெரிவித்த மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவித்தார். (32)

## சுனாமியால் அழிந்த வீடுகளுக்கு இரண்டரை லட்சம் நஷ்ட ஈடு

**~பெற்றுக் கொடுக்க அரசு தீர்மானம்**

சுனாமி அனர்த்தத்தின் காரணமாக முழுமையாக அழிந்திருக்கும் வீடு ஒன்றிற்காக இரண்டரை இலட்சம் ரூபாவினை நஷ்டஈடாகப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த உதவி அரச வங்கிகள் இரண்டின் ஊடாகப் பெற்றுக் கொடுக்கப்படும். பகுதியளவில் பாதிக்கப்பட்டிருக்கும் வீடுகளுக்கு ரூபா ஒரு இலட்சம் நஷ்டஈடாகப் பெற்று கொடுக்கப்படும். இந்த நஷ்ட ஈட்டுத் தொகை இரண்டு கட்டங்களாகக் கொடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது சுனாமி அனர்த்தத்தின் காரணமாக அழிந்திருக்கும் வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பில் சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது. (32)

# காலியில் சுனாமியால் பாதிக்கப்படாதோரும் நிவாரணம் பெறுவதற்கு முயற்சி

**~அமைச்சர் பியசேன தம்மகே குற்றச்சாட்டு**

(கொழும்பு)

காலி மாவட்டத்தில் கடற்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்படாத பலர் தற்காலிக கூடாரங்களை அமைத்து சுனாமி அனர்த்த நிவாரணங்களைப் பெற முயற்சிப்பதாக திறன்விருத்தி, தொழில்மற்றும் தொழில்நுட்பக்கல்வி அமைச்சர் பியசேன தம்மகே கூறியுள்ளார்.

கூடாரம் அமைப்பது தற்போதைய நாகரிகமாக மாறிவிட்டது. இது செயற்கைச் சுனாமி ஆகும். இவர்கள் சுனாமியால் பாதிக்கப்படாத செயற்கை சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களே. இவர்கள் சுனாமி கடற்பேரலை நிவாரணங்களைப் பெறுவதற்காகவே இவ்வாறு முயற்சிக்கின்றனர்.

இதற்குச் சிறந்த உதாரணம் ரத்ம பொலிஸ் நிலையத்திற்கு அப்பால் உள்ள மைதானத்தில் அறுபத்திரண்டு குடும்பங்கள் தங்கியுள்ளன. இவர்களுள் எட்டுக் குடும்பங்கள் மட்டுமே சுனாமி கடற்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களாவர். ஏனைய அனைவரும் புதியவர்கள். அதாவது சுனாமியால் பாதிக்கப்படாதவர்கள். சுனாமியால் பயன்பெறவே அவர்கள் இந்த இடத்திற்கு வந்துள்ளனர். இந்த மைதானம் அரசிற்குச் சொந்த மானது என்பது குறிப்பிடத்தக்கது என்றார் அவர்.

# ஜே.வி.பி யினரது வியாபார நடவடிக்கைகள் குறித்து விசாரணைக்கு சனாதிபதி உத்தரவு

## - ஐ.தே.க. முக்கியஸ்தர் தகவல்

ஜே.வி.பியின் செயலாளர் டில்வின் சில்வாவின் உல்லாச விடுதி வியாபாரம், பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சவின் மனைவி நடாத்தும் வியாபார நடவடிக்கைகள், பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணத்திலகவின் 200 இலட்சம் முதலீடு தொடர்பான விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இரகசியப் பொலிசாரிடம் சனாதிபதி கேட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று நடந்த ஊடக மாநாட்டில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் முக்கியஸ்த்தர் ஜே.வி.பி யை சனாதிபதி அரசைவிட்டு வெளியேறுவதானால் வெளியேறலாம் என நேரடியாகக் கூறிவிட்டார். எனினும் அவர்கள் இப்போது அரசாங்கம் தமது எனக் கூறுகிறார்கள். இப்போது நிலைமை மாறிவிட்டது. தாம் அரசில் இருக்கப்போவதாகவும் விரும்பினால் சனாதிபதி போகட்டும் என அவர்கள் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை ஜே.வி.பி தற்போது வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைத் தமக்கு உதவிக்கு அழைத்திருப்பதாகத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்த்தர் சனாதிபதியின் எச்சரிக்கையுடன் அவரது இயலாமையையும் ஜே.வி.பி உணர்ந்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார். இந்த நிலையில் வெள்ளையரைத் தொடர்ச்சியாக எதிர்த்து வரும் ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அவர்களுடைய நாட்டிலேயே தற்போதும் தங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் முன்னாள் அமரிக்க சனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ், பில் கிளிங்டன் ஆகியோரது கையெழுத்தைத் தனது மகனுக்காக பெற்றுக் கொள்வதற்கு அவர்களின் இராப்போசன விருந்தில் கலந்து கொண்ட பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச முனைந்தார் எனவும் குற்றம் சாட்டியுள்ளார். இதேவேளை ஜே.வி.பி யின் நிறுவுனரும், அதன் முன்னாள் தலைவருமான மறைந்த றோகண விஜயவீரவில் எத்தகைய தவறுகள் இருந்தபோதும் ஒரு விடயத்தில் அவர் உறுதியாக இருந்தார் எனவும் தாம் துப்பாக்கிக் குண்டுபட்டு மரணித்தாலும் பண்டாரநாயக்க குடும்ப அரசியலோடு இணையப் போவதில்லை எனவும், உறுதியாகச் செயற்பட்டார் எனவும் நேற்றைய ஊடக மாநாட்டில் ஐக்கியதேசியக் கட்சியின் முகியஸ்த்தர் சுட்டிக் காட்டியுள்ளார். (32)

# மகிந்தராஜபக்ஷவுக்கு எதிராக சந்திரிகா சதிமுயற்சி

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பிரதமர் மகிந்தராஜபக்ஷவுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 11 ஆம் திகதி கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு நடைபெற்ற வேளை மகிந்த சுகவீனமுற்றிருந்ததாகவும், அவர் முன்வைத்த யோசனைகள் கட்சி உறுப்பினர் சிலரால் நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் நிறைவேற்றதிகார சனாதிபதி முறையை நீக்கிப் பிரதமரின் அதிகாரத்தை ஏற்படுத்தவும், தேர்தல் சட்டத்தில் மாற்றம் கொண்டுவரவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும் அவர் சில யோசனைகளை முன்வைக்கவும் இருந்தார் எனவும் எனினும் இவை நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்றுத்தருவதாகக் கூறி பெண்ணொருவரிடமிருந்து லஞ்சம் பெற்றது தொடர்பாக மகிந்தராஜபக்ஷவுக்குக் கிடைத்த முறைப்பாட்டுக் கடிதத்தை சிறிலங்கா தொலைக்காட்சி இந்த மோசடியில் மகிந்தராஜபக்ஷவைத் தொடர்புபடுத்தி வெளியிட்டிருந்த செய்தி சந்திரிகாவின் சூழ்ச்சியினால் தான் இடம் பெற்றிருக்கிறது. என்பதும் அறிய வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இலங்கைக்கு வரும் வெளிநாட்டு ராஜதந்திரிகளும் இவரைச் சந்திக்காமல் சனாதிபதியையும், வெளிநாட்டமைச்சரவையும் மட்டும் சந்தித்து செல்லும் நிலையும் ஏற்பட்டிருக்கின்றது.

### ஆழிப்...

கருத்து வெளியிட்டுள்ளார். கடந்த வெள் ளிக் கிழமை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்ததன் பின்னரே அவர் இக்கருத்துக்களை வெளியிட்டார். சர்வதேச ரீதியாக கிடைக்கப்பெற்றுள்ள நிவாரணங்களை தமிழ் மக்களுக்கும் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் சிறிலங்கா அரசுக்கு அழுத்தங்களை கொடுக்கும் முகமாக அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழு ஒன்று ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது. நிவாரணப் பொருட்களை விநியோகிக்கும் கட்டமைப்புத் தொடர்பாக இருதரப்பினருக்கும் மத்தியில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் மேலும் உள்ளதாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

### படையினர்...

இன்று காலை 9.30 மணிக்கு யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சூழலில் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்து கூடும் பொது மக்கள் அங்கிருந்து கோவில் வீதியூடாக அவ் வீதியிலுள்ள இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்குச் சென்று அங்கு போராட்டங்களில் ஈடுபடுவதுடன், படையினரது நடவடிக்கைகளை நிறுத்தக் கோரும் மகஜர்களையும் வழங்கவுள்ளனர்.இப் பேரணியில் கோப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த மக்களைக் கலந்து கொள்ளுமாறு வலி-கிழக்கு கிராமிய அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக் கொள்ளுகிறது. (33)

### ஓட்டமாவடி...

ஊடவியலாளர்கள் சந்திப்பொன்றின்போது அவர் இதனைத் தெரிவித்தார். இன்று தமிழ் - முஸ்லிம் உறவை சீண்டி விட்டு வேடிக்கை பார்க்கும் நடவடிக்கைகளை பேரினவாதிகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்த அடிப்படையில் தான் ஓட்டமாவடியைச் சேர்ந்த ஓட்டோச்சாரதியான முஸ்லிம் இளைஞரொருவரும் கொல்லப்பட்டார். இச்செயலை விடுதலைப்புலிகள் தான் செய்தார்கள் என பேரினவாதிகளுக்கு துணைபோகும் சக்திகளினால் தெரிவிக்கப்பட்டாலும் இதில் எவ்வித உண்மையுமில்லை என்பதை முஸ்லிம் புத்திஜீவிகளிடம் தெரிவித்துள்ளோம். இரு இனங்களுக்கு இடையே உறவுகள் மலர்ந்து வரும் வேளையில் அதனை கிள்ளி எறிவதற்காக பேரினவாதிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளிலொன்றே அப்பாவி முஸ்லிம் இளைஞரின் படுகொலையாகும். ஓட்டமாவடி பிரதேச முஸ்லிம் தலைவர்களை விரைவில் சந்திக்கவிருக்கின்றோம். அச்சந்திப்பின்போது கொலைக்கான பின்னணி, அதனை யார் செய்தார்கள் என்பதை தெரிவிப்போம். அப்போது இதன் திட்டமிட்ட சூத்திரதாரி யார் என்பதை முஸ்லிம் மக்கள் புரிந்துகொள்வார்கள். இவ்வாறான கொலை நடவடிக்கைகளை எமது போராட்ட காலத்திலிருந்து இன்றுவரை பேரினவாதிகள் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றனர். ஓட்டமாவடி முஸ்லிம் இளைஞர் கொலையைத் தொடர்ந்து ஆறு முஸ்லிம்கள் விறகு வெட்டுவதற்காகச் சென்றனர். அவர்களும் கொலை செய்யப்பட்டு விட்டார்கள் என வதந்திகள் திட்டமிட்டு பரப்பப்பட்டு "வாருங்கள் போராடுவோம்" என முஸ்லிம் இளைஞர்களின் உணர்வுகளைத் தூண்டி விட்டு சிலர் வேடிக்கை பார்க்க முற்பட்டார்கள். ஆனால் அப்படி ஒரு சம்பவம் இடம்பெறவில்லை என்பதை மக்கள் உணர்ந்து விட்டனர் என்றும் குறிப்பிட்ட அவர், வதந்திகளுக்கும் உணர்வுகளைத்தூண்டும் நடவடிக்கைகளுக்கும் முஸ்லிம் இளைஞர்கள் இரையாகாமல் நடந்து கொள்வார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம் என்றும் அவர் கூறினார்.

### அவசர...

மாறினால் இந்தக் கடற்கரையில் இருந்து 100 மீற்றர் என்ற தாக்கம் எங்களுக்கு ஏற்படாது நாங்கள் அந்த இடங்களிலேயே சர்வதேச உதவிகளுடன் அங்கு வசித்த மக்களுக்கு அதேபோன்று வீடுகளை அமைத்துக் கொடுப்போம். எமது அரசாங்கம் வரும்வரை தற்போதைய அரசாங்கத்தினால் எந்தவொரு வீடும் அமைக்கப்படுமென நான் நம்பவில்லை என்றார் ராஜித சேனாரட்ண.

### மன்னார்...

சாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உந்துருளியில் வந்த இரண்டு இளைஞர்களுக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் துப்பாக்கிச்சூட்டில் முடிந்த போது இவர்களில் இருவர் காயத்திற்குள்ளாகினர்.

இச்சம்பவத்தின் போது சனார்த்தனும், இவரைத்தேடி வந்தவர்களுள் ஒருவரான ஜேசுதாசன் மிரண்டா என்ற வங்காளையைச் சேர்ந்த இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் இருவரும், முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# க.பொ.த.(உ/த) கணித விஞ்ஞான மாணவருக்கான இலவசக் கருத்தரங்கு

பிரபல ஆசிரியர்களுள் ஒருவரான அன்பழகன் ஆசிரியர் அவர்களால் க.பொ.த உ/த கணித விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான இரசாயனவியல் பாடத்திற்கான செயலமர்வு பின்வரும் நேர அட்டவணையின் படி நடைபெறவுள்ளதால் 2005 பரீட்சை எடுக்கும் உரிய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர்.

1. 19.03.2005 சனி மாலை 2.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும்

2. 20.03.2005 ஞாயிறு மாலை 2.30 மணிக்கு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் நடைபெறும். (05)

### படையினர் கெடு...

சோதனைச்சாவடியில் இறக்கப்பட்டு அவர்களது அடையாள அட்டைகள் சேதனை செய்யப்படுவதுடன் இளைஞர்கள், யுவதிகள் தனிமையில் அழைத்துச்செல்லப்பட்டு விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இதனால் பயணிகள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது. (33)

### அரசால்...

டிருந்த மீன்பிடி வள்ளங்களும், வலைகளும் அப்போது முற்றாக அழிவுக்குள்ளாகியிருந்தன.

எனினும் தற்போது எஞ்சியிருந்த ஒரு சிறு பகுதி மீன்பிடி வள்ளங்கள் மீனவர்களினது சுயமுயற்சியினால் திருத்தப்பட்டுள்ளது. அத்துடன் நூறிற்கும் குறைவான புதிய படகுகள் சர்வதேச உதவி அமைப்புக்களால் ஒரு பகுதி மீனவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆயினும் சுனாமி கடல் அனர்த்தத்தின்போது 1500இற்கும் அதிகமான மீன்பிடிக்கலங்கள் அழிந்து போயிருந்தபோதிலும் இலங்கை அரசினால் இதுவரை எந்தவொரு உதவியும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலையினில் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்ட அனைத்து மீனவர்களிற்குமான அரசின் நஷ்ட ஈடு கிடைக்கும் வரை படகுகள் மூலமான மீன்பிடியில் ஈடுபடுவதில்லையென அப்பகுதி மீனவ சங்கங்கள் தற்போது முடிவு செய்துள்ளன.

இதனிடையே வடமராட்சி வடக்குக் கடற்பரப்பினில் தற்போது நூறிற்கும் குறைவான கட்டுமரங்கள் மூலமான மீன்பிடி மட்டுமே இடம் பெற்று வருகின்றது. எனினும் அவ்வாறு பிடிக்கப்படும் மீன்கள் கூ[illegible] அவர்களது சுயதேவைகளை மட்டுமே நிறைவு செய்யக்கூடியதாக இல்லையெனக் கூறப்படுகின்றது. (27)

### மட்டு...

சுகாதார பரிசோதகர் என்.விமலசேகரன், பொதியிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள. இந்தப் பொருட்கள் தங்கள் முன்னிலையில் அழிக்கப்படவில்லை என்று கூறினார். அரிசி, பால்மா, தேயிலை, பருப்பு ஆகிய நான்கு பொருட்கள் மட்டும் தங்களால் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு கிடங்கில் போட்டு புதைக்கப்பட்டது. அந்த இடத்திலேயே பொதியிடப்பட்ட பொலித்தீன்கள் எரிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். புதைக்கப்பட்டிருந்த பொருட்கள் கண்டு பிடிக்கபட்டுள்ளதையடுத்து ஆத்திரமடைந்த மக்கள் மட்டக்களப்பு - கல்முனை வீதியில் குறுக்காக அமர்ந்து மறியல் செய்தனர். பிரதேச செயலகத்தின் அலுவலக கண்ணாடியன்னல்கள் மற்றும் பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனம் ஆகியனவும் மக்களால் சேதமாக்கப்பட்டன. மக்களை கலைக்க பொலிசாரும் அருகிலுள்ள முகாமிலிருந்து விசேட அதிரடிப்படையினரும் முயற்சிகளை மேற்கொண்டனர். இதனால் பொலிசாருக்கும், பொது மக்களுக்குமிடையில் எற்பட்ட முறுகல் நிலையையடுத்து பொலிசாரை நோக்கி கற்கள் வீசப்பட்டன. இவர்கள்ள கலைப்பதற்காக பொலிசார் கண்ணீாப் புகையடித்தனர்.

பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்புடன் பிரதே[illegible] செயலாளா அங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டார்.

நிவாரணப் பொருட்கள் சம்பவம் தொடர்பாக பொலிசார் அவர் மீது விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அரசாங்க அதிபர் வேல் முருகு சண்முகம் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு பொலிஸ் பாதுகாப்புடன் சென்றிருந்த போதிலும் அவர் பொது மக்களைச் சந்திக்க மறுத்து விட்டார் அதனையடுத்து அவருக்கு எதிராகவும் பொதுமக்கள் கோசமிட்டனர்.

## பணிநிலை வெற்றிடத்தின் 9ஆம் பக்கத்தொடர்ச்சி

4) எழுதுவினைஞர்/தட்டெழுத்தாளர்பதவிகளைப் பொறுத்தவரையில் அத்துறைகளில் மூன்று வருட அனுபவமுடையோருக்கும் கணனித்துறையில் செயற்படும் ஆற்றல் உள்ளோருக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

**14. சாரதி பதவி (10) (முழுநேரம்)**

திருகோணமலையில் 03 பதவிகள், வடக்கு கிழக்கிலுள்ள ஏனைய மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பதவி.

**கல்வித்தகைமையும், அனுபவமும்**

1) 8 ஆம் வகுப்பில் சித்தி அத்துடன் பாரமான/ பாரமற்ற ஊர்திகளைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் அத்துடன்

2) ஒழுங்கான பணியில் குறைந்தது 3 வருட சாரதி அனுபவம்

3) இரண்டாம் மூன்றாம் மொழிகளில் பேசவும் எழுதவும் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**15. அலுவலக உதவியாளர் பதவி (10)**

திருகோணமலையில் 3 பதவி, வடக்கு கிழக்கிலுள்ள ஏனைய மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பதவி.

**கல்வித்தகைமையும், அனுபவமும்**

1) 08ஆம் வகுப்பில் சித்தி

2) அலுவலகப் பணிகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படும்.

செ.பத்மநாதன்,
திட்டப்பணிப்பாளர்,
வ.கி.வீ.பு.தி

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது